ஆசிரியர்: மு.கருணாநிதி

2 அணா

முரசு 1 | சென்னை | 5 — 11 — 54 | வெள்ளி | ஒலி 32

# 'சீனத்து விருந்தாளி' சிரம் குனிந்தார் !

நாகாக்க வேண்டியதன் அவசியத்தை நானிலமெங்கும் பறைசாற்றியவர்-ஊர் காக்கும் உத்தமர் இப்போது காங்கிரசைக்கூட காக்கும் சக்தியிழந்த சத்திய சீலர்-அந்த நேரு துரைதான் சைகோன் நகரிலே செயலற்றுப் போனார்!

எழுச்சிகொள் ஆசியாவின் ஏற்றனய தலைவர்—சூழ்ச்சிகொள் ஏகாதிபத்தியத்தின் சிம்ம சொப்பனம்-அந்த வீராதி வீரர்தான் வியட்நாமில் விம்மி அழவேண்டிய நிலைக்கு ஆளானார்!

புவிமிசை இணையின்றி, பொது வாழ்வில் புகழோடு உலவிய பூமான்—இந்த பிறவித் தலைவரைப்போல் வேறெங்கும் பார்த்ததுண்டோ; அன்றி கதைதான் கேட்டதுண்டோ என சரணம் பாடிய தேசியத் திருவாளர்கள் தலைகவிழும்படி சைகோன் மக்கள் அக்டோபர் 31-ம் தேதி நடத்தியிருக்கின்றனர் மோதிலால் மைந்தருக்கு எதிராக!

''முடிசூடா மன்னவரின் அடிபணிய வேண்டியிருக்க, கருங்கொடி காட்டி களிப்படைகிறீர்களே; கயவர்களே!''—என்று நாகரிகமாய் எதிர்ப்பு காட்டிய நம் மீது பாய்ந்தவர்கள் வெட்கித்தலைகுனியும்படி வியட்நாமில் நேருப்பண்டிதர் மீது கண்டனக் கணைகள் பாய்ந்து வந்திருக்கின்றன!

சூ-என் - லாயுடன் சீனத்து விருந்தை சுவைத்து மா-சே-துங்குடன்மகிழ்ந்துகுலாவி பின்னர் தாயகம்திரும்பும் ஆசிய ஜோதிக்குத்தான் சைகோன் நகரிலே இந்த 'விபத்து' நேர்ந்திருக்கிறது!

விமானநிலையத்திலே வியட்நாம் தலைமை அமைச்சரும், தலைமைத் தளபதியும் அரசாங்க முறையில், கைலாகு தந்து வரவேற்றனராம்; அதோடு பண்டிதரின் வெளிநாட்டுக் கொள்கையை வன்மையோடு எதிர்த்திடும் துண்டுக் காகித மழையும் அவரைச் சூழ்ந்து கொண்டதாம். அந்த கண்டனத் தாள்களில் கையெழுத்திட்டிருப்பவர்கள் விலாசம் தெரியாதவர்களல்ல; வழக்கம்போல் காலிகள்தரும் தொல்லையென்று அவைகளை ஒதுக்கிவிட! வியட்நாமின் தேசிய ராணுவத் தலைமைத் தளபதி ஹின்னும், தனியாக இயங்கும் இதர மூன்று ராணுவங்களின் தளபதிகளுமே அதில் கையொப்பமிட்டுள்ளனர். 'ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அந்தரங்க நண்பர்தான், பண்டிதர்' என்று அர்ச்சனை செய்திடும் பிரசுரங்கள் விண்ணளாவப் பறந்தனவாம். வியட்நாமிய மொழியில் தயாரிக்கப்பட்ட பிரசுரங்கள்கூட விமானக் கூடத்தை வட்டமிட்டனவாம்! இவை யாவும் நேருவின் வெளிநாட்டுக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவிப்பவையாம்!

அந்த எதிர்ப்பு எத்தகை நோக்கு கொண்டது என்பதல்ல நமக்கு வேண்டியது; இங்கு மட்டுமல்ல, நேருப் பண்டிதரை தூர தேசத்திலும் எதிர்க்கின்றனர் என்பதே நம் கவனத்திற்குறியது!


முன்னம் இந்தோனேஷியாவில் கருப்புக்கொடி காட்டிய போது இடித்துரைக்காத நேரு; பஞ்சாபிலே ஒரு பொதுக் கூட்டத்தில் கலாம் விளைவித்தபோது சிறிதேனும் பதட்ட மடையாத நேரு, நான்சேன்ஸ் என்று நாலாந்தர மொழியில் ஒரு மாபெரும் சமுதாயத்தை வசை மாறி பொழிந்தமைக்கு எதிர்ப்புக் காட்டியமைக்காக ''சிறுபிள்ளைத் தனம்'' என்று சீறி விழுந்தார்; சென்னை மௌண்ட்ரோட்டில் அமைதியாகக் கருங்கொடி காட்டிய ஆயிரக்கணக்கான காளையர் தடியடிப் பிரயோகத்துக்குஆளாகி செங்கீரில் மிதந்ததை சுவைத்தபடியே காரிலே பவனிவந்தார்—'காட்டு மிராண்டிகள்' என்றுநம் மீது காய்ந்தவர், அந்தக் காட்டுமிராண்டிகளை கடல்கடந்தபூமியாம் வியட்நாமிலும் சந்தித்திருக்கிறார்.

'பைத்தியக்கார விடுதியில் இருக்கவேண்டியவர்கள்' இங்கு மட்டுமல்ல: சைகோன் நகரிலும் சஞ்சரித்திருக்கிறார்கள்! பண்டிதரின் கருத்துப்படி! சாதாரண மனிதர்களாக மட்டுமல்ல; பட்டாள வீரர்களாக, இராணுவத் தளபதிகளாகவும் உலவுகிறார்கள் !

அலைகடல் தாண்டியும் மலை எனத் திரண்டிருக்கும் எதிர்ப்பை—அவரது மொழிப்படி 'சிறுபிள்ளைத் தனத்தை'— நினைத்துப் பார்க்குங்கால் சிரிப்பு மோதி நம் இதழ் கிழிக்கிறது.

'தன் வினை தன்னைச்சுடும்' என்கிற தத்துவார்த்தம் பேச வரவில்லை, நாம்! வெளிநாடுகளிலெல்லாம் நேருப்பண்டிதரை சூழ்ந்திடும் எதிர்ப்புக்கு நம்மால் பலப்பல பொருள்களைச் சுட்டிக் காட்ட முடியும்.

## கூண்டு மாற்றம் !




நவம்பர் 1-ம் தேதியன்று பிரெஞ்சு திட்டுக்களை இந்திய சர்க்காரிடம் ஒப்படைக்கும் அதிகார மாற்றம் அமைதியான முறையில் நடைபெற்றது.

'' அமைதியான முறையில்கண்டனம் தெரிவிப்பது நானில மெங்கும் நிலவும் நாகரிக வழக்கம்; அது தெற்கிலிருந்துவந்தால் மட்டும் நீர் ஏன் தாவிக்குதிக்கிறீர்'' என்றுஅந்த சைகோன் நிகழ்ச்சி பண்டிதரைப் பார்த்துக் கேட்கிறது.

அதுமட்டுமோ ? வியட்நாமில் நடந்த அந்த 'வேதனைச் சித்திரம்' '' பரிவுமிக்க பண்டிதரே !

● 12ம்-பக்கம்

Best copy available

# நாய்வாலை நிமிர்க்கிருர் - 'மாய்மாலக்காரர்!'

நூற்ருண்டுக் காலமாக இந்திய வரலாற்றில் பிரெஞ்சு அரசாங்கம் ஏகாதிபத்திய வெறி கொண்டு இறுக்கி வைத்த ஏடுகள் நவம்பர் 1–ல் கிழித்தெறியப் பட இருக்கின்றன. பிரெஞ்சிந்தியப் பகுதியில் தாங்கள் நடத்திக் காட்டிய அட்டகாசங்களை யெல்லாம் கனவுக் காட்சியில் ரசித்தபடி, அவர்களெல்லாம் தாயகம் திரும்புகின்றனர். காலதேவனின் குறி உணர்ந்து—பொதுமக்களின் எண்ணத்திற்கு மதிப்பளித்து 'வாபஸ்' ஆகும் பிரெஞ்சுப் பிரதமர் மெண்டெஸ் பிரான்சு விடுதலை விரும்பிகளின் பாராட்டுக்குறியவர்—மார் தட்டி, நெஞ்சு நிமிர்த்தி, மலை அசைந்தாலும் காரை — புதுவைப் பிரதேசத்திலிருந்து நாங்கள் அசையோம் என்று முன்னம் வீராப்பு பேசிய நாட்டினர்; சுரண்டியது போதும், இனியாவது அவர்கள் சுகவாழ்வு வாழட்டும் என்ற வாழ்த்தோடு கப்பலேறுகின்றனர்—இந்த அமைதியான அதிகார மாற்றத்திற்கு வழி அமைத்தவர் மெண்டஸ் பிரான்சு. இருந்தபோதும் அவரது குழுவிலும் குள்ளநரியொன்று புகுந்து கொண்டிருக்கிறது.

கடல் கடந்த பிரதேசங்களின் அமைச்சராம் ராபர்ட் பியுரன் சென்ற கிழமை போர்ச்சுகீசியர்கள் கோவாவை விட்டு வெளியேற வேண்டிய அவசிய மில்லை என்கிற முறையிலே அபயம் அளித்திருக்கிருர்.

கோவாவிலே வாழும் மக்களில் எண்பது சத வீதத்தினர் மொழியினுலும், இரத்த உறவினுலும் தாயகமாம் போர்ச்சுகலோடு ஐக்கியமடைந் திருக்கிருர்களாம். எனவே போர்ச்சுகீசியர்கள் தங்களைப் போல வெளியேற வேண்டிய அவசிய மில்லையாம்!

கொள்ளையிட்டது போதும்; இனியாவது கௌரவமாய்வாழ்வோம் வாருங்கள் என்று அழைப்பு விடுத்து, உடன் அழைத்துச் செல்ல வேண்டியவர், அதிகார தர்பார் நடக்கட்டும் என்று ஆசிர்வதித்துப் போயிருக்கிருர் போர்ச்சுகீசிய செய்தி ஸ்தாபனங்கள் அனைத்தும் பிரெஞ்சு அமைச்சரின் இந்தப் பேச்சுக்கு, மெருகு பூசி மகிழ்ந்திருக்கின்றன, போர்ச்சுகல் பிரதமர் சலாசர்கூட ஆதாரம் கிடைத்து விட்டதாக கொட்ட மடித்திருக்கிருர்,

இந்திய உபகண்டத்திலிருக்கும் கோவா, ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருக்கும் போர்ச்சுகலின் ஒரு பகுதியாம்—முட்டாளும் நம்ப முடியாத இந்த வாதத்துக்கு 'நகாசு' வேலைகள் செய்து நம்முன்னே வைக்கிருர், சலாசர்!

அதோடு நின்றுவிட வில்லை, அவர்! மே திங்கள் இருபதாம் தேதியன்று பேசினர்; கோவாவை நாங்கள் காலி செய்ய நேர்ந்தால் அதை கொளுத்திவிட்டுத்தான் போவோமென்று!

ஆம்; கொளுத்தும் கூட்டத்தைச் சேர்ந்தவர்தான், சலாசர்!

முன்னம் 1902–ல் இந்தியாவுக்கு வழி அமைக்க வந்த வாஸ்கோடகாமா மெக்காவுக்குச் சென்று கொண்டிருந்த வியாபாரக் கப்பலுக்குத் தீவைத்து, அந்தக் கப்பலிலே பிரயாணம் செய்த 240– ஜீவன்களை-பச்சைக் குழந்தைகளுட்பட அனைவரையும் அந்த தீயிலே தூக்கி எறிந்தான்,

அதோடு நின்ருனு அவன்? தன் விருப்பப்படி மூர் ஜாதியாரை வெளியேற்ற மறுத்த கள்ளிக் கோட்டைக் காவலன் ஜாமொரினை அவமானப் படுத்த, சில வியாபாரிகளைப் பிடித்து, அவர்களது காதுகளையும், கைகளையும் அறுத்து, அவர்களை ஜாமொரினின் சபைக்கும் அனுப்பி வைத்தானும்.

அது மட்டுமா? கடலில் இருந்தவாரே கள்ளிக்கோட்டையில் குண்டுமாரி பெய்து தாயகம் திரும்பினுன் வாஸ்கோடகாமா.

அந்த வஞ்சகனின் வழி வந்தோராம் சலாசரும் இப்போது கொக்கரிக்கிருர்; கோவாவை அக்கினிப் பிழம்பாக்கித்தான் திரும்புவாராம்! அவரது அமைச்சர் குழாமும் இதற்குப் பல்லவி பாடுகிறது,

பாவம்! காலமறியாதவர் சலாசர்! இவரைவிட இறுமாப்பு பேசி வாழ்ந்தவர்களெல்லாம் இருந்தவிடம் தெரியாமல் போய் விட்டார்கள். பிரெஞ்சு நாட்டிலிருந்து வந்த கண்ஜாடையைச் சான்றுக்கு அழைத்து சவால் விடுக்கிருர்-பரிதாபமான நிலை தான், அவருக்கு! மேற்கோள் காட்டுவதற்குக்கூட பிரான்சுக்கு ஓடுகிருர், அவர்!

பூகோளப் பரப்பில் இந்தியாவோடு இணைந்து நிற்கும் தென்னகமே பிரிந்து வாழ போர் தொடுத்துவிட்டதாம் — இந்த நிலையில்தான் அவர் சொல்கிருர், இந்த நாட்டிலே இருக்கும் கோவா எங்கோ இருக்கும் போர்ச்சுகலோடு சேர்ந்த பகுதியாம்! அறிவிலியும் சொல்லக்கூசும் வாதத்தை தாராளமாக வீசுகிருர், சலாசர்!

நாய்வாலை நிமிர்த்தும் பண்பும், கோவாவையும், போர்ச்சுக்கலையும் பொருத்தும் அவரது செயலும் ஒன்ருக இருப்பதை நம்மால் எடுத்துக் காட்டாமலிருக்க முடியவில்லை!

# 'பல்லக்கு ஏறிகள்' பழைய நிலை மறந்தனர்!

*அடிமை பூமியில் உரிமை முரசு கொட்டுவோர் காராக்கிரகத்தில் பூட்டப்படுவதும், பின்னர் பாசிச வெறி பதுங்கியதும் அந்த விடுதலை விரும்பிகள் அரசு கட்டிலேறுவதும் அரசியல் உலகின் அன்ருட நிகழ்ச்சிகள். செத்துமடிவோம் என்பது தெரிந்திருந்தும் தாயக மீட்சிக்கு தங்கள் கடைசி மூச்சையும் காணிக்கையாக்கத் தயாராயிருப்பவர்கள் பின்னர் ஒருசமயம் நாடுகாக்கும் தலைவர்களாகலாம் — காடு திருத்தி கழனியாக்கும்அமைச்சர்களாகலாம்! இருந்தாலும் அவர்களை—சுதந்திர அன்னையின் சுந்தர முகத்தில் பன்னீர் தெளிக்கும் அந்த வீரர்களை சிறைக்கோட்டத்தில்தள்ளி சிந்தை மகிழும்—அதிகார போதை! அந்த போதையின் மயக்கத்தில் வீழ்ந்துவிட்டோர் செய்யும் கொடுமைகள்தான் எவ்வளவு?*

*மணிமுடி தரித்து, தனிஅரசு காணவேண்டியவர்களை மயானத்திற்கு அனுப்பும்!*

*கண்மூடி மௌனிகளாய், விரல் நீட்டிய திசையில் பாய்ந்திடும் கோழைகளை—கோடரியின் காம்புகளை நாடறிய பட்டாபிஷேகம் செய்வித்து பாதுகாப்பளிக்கும்; காய்ச்சிய மழுவையும் கையிலே தந்து அதை விடுதலை வீரர்கள் மீது பாய்ச்சிட தக்க தருணத்தையும் சொல்லி அனுப்பும்!*

*அத்தகைய ஆதிபத்திய வெறியினரின் செய்கைகளுக்கு ஆளாகி, இன்று நாடாளும் நிலை பெற்றிருப்பதுதான் காங்கிரஸ் கட்சி; பாகிஸ்தானின் முஸ்லீம் லீகும் விடுதலை தேடும் கட்சியாக இருந்து இன்னல்கள் பல அனுபவித்ததுதான்!*

*பல்லக்கு தூக்குபவன் ஒரு சமயம் பல்லக்கில் ஏற நேர்ந்தால், விவேகமுள்ளவன்—தன்னைப்போல் பிறரையும் நினைக்கும் தகைமையாளன்—"மெதுவாக நடவுங்கள்; வேகம் வேண்டாம்" என்றுதான் சொல்லுவான்!*

*அர்த்த ராத்திரியிலே குடை பிடிக்கும் பழையநிலை மறந்தவனே, கசையடி தந்துஅவர்களை விரட்டுவான்; கழுகைப்போல பறக்கச் சொன்னல் இப்படி கழுதையைப் போல நகர்கிறீர்களே—என்று உரத்த குரலிலே வசை பாடுவான்!*

*பாகிஸ்தானின் ஆளும் கட்சியாம் முஸ்லிம் லீக்கும், நம்மை ஆளும் காங்கிரஸ் கட்சியும் பழையநிலை மறந்த பல்லக்கு ஏறியின் நிலையிலேதான் இருக்கின்றன.*

*எந்த உரிமைகளுக்காக முன்பு சிறைக்கோட்டம் புகுந்தார்களோ அதே உரிமைகளுக்காக நாளெல்லாம் உழைக்கும் உத்தமர்களை காவல் கைதிகளாக்கி களிப்பிலாழ்ந்தனர். விடுதலை வேட்கை மிகுதியால் எழுச்சிநீர் பருக நினைப்பவருக்கெல்லாம் வாய்ப்பூட்டு போட்டனர்!*

*இருந்தபோதும் வீறுகொண்ட மக்கள் கற்பித்த பாடத்தால் பாகிஸ்தான் முஸ்லிம் லீகினர் தங்கள் போக்கை மாற்றிக் கொண்டதாகவே தெரிகிறது.*

*கான் சகோதரர்கள் வடமேற்கு எல்லை மாகாணம் தந்த இரண்டு சுதந்தர தீபங்கள் — அந்த தீபங்களின் துணையினுல் இருட்டிலே வேட்டையாடி நின்ற ஆங்கிலேயத் திருடர்கள் எவ்வளவோ தூரம் பயந்து ஓடியிருக்கிருர்கள்! அந்த கான் சகோதரர்களுக்கு பாகிஸ்தான் தந்த பரிசு என்ன தெரியுமா? கொடுமை மிக்க சிறைவாசம்!*

*பட்டாணிய சமூகம் வருந்திக் கண்டெடுத்த கட்டாணி முத்துகளாம் கான் சகோதரர்கள் காராக்கிரகத்திலே வாடினர்—தனிநாடு கேட்டமைக்கு பாக். சர்க்கார் அந்த தண்டனையைக் கொடுத்திருந்தது,*

*சமீபத்தில்தான் சகோதரர்களில் ஒருவரான எல்லைப்புற காந்தி யென்று பெயர்பெற்ற கான் அப்துல் கபர்கான் விடுதலை செய்யப் பட்டார், இப்போது இன்னுமொரு தித்திப்பான செய்தி யொன்று வந்திருக்கிறது. முன்பு ஆறு ஆண்டு காலம் சிறைவாசம் அனுபவித்த டாக்டர் கான் சாகிபுக்கு மந்திரி பதவி கொடுத்திருக்கிறது, லீக் சர்க்கார்,*

*செய்த தவறை முஸ்லிம்லீக் திருத்திக் கொண்டது வரவேற்கத் தக்கது; வாழ்த்துக் கூற வேண்டியது! இந்த நேரத்திலேதான் நாமும் நமது ஆளும் கட்சியினரின் போக்கு பற்றி சிந்திக்க வேண்டியவர்களாகிரேம்.*

*நாலணு மெம்பர் முதல் நாடாளும் பண்டிதர்வரை*

[8-ம் பக்கம் பார்க்க]

One side of the page is dark

# தலையங்கம்

சென்னை [ 5—11—54 ] வெள்ளி

## கொள்ளியை அணைப்பாரா குலக்கொழுந்து ?

இரயில் பாலங்களைக் கொளுத்தினர்—கலகம் செய்தனர்—கொள்ளையடித்தனர்—வீடு புகுந்து கொடுமை புரிந்தனர்—பார்ப்பனர்களை அடித்துக் காயப்படுத்தினர்—கொல்ல முயற்சித்தனர்—சதி நடத்தினர்—பயங்கர ஆயுதம் ஏந்திவந்தனர்-பச்சைக் குழந்தைகளை மிரட்டினர்—இப்படியெல்லாம் குற்றங்கள் சாட்டப்பட்டு அந்தக் கொள்கை வீரர்கள் கூண்டிலே அடைக்கப்பட்டனர். திராவிட முன்னேற்றக்கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தின் மீது—அதை அழித்து தரைமட்டமாக்கிவிடவும், தி. மு. கழகம் இருந்த இடத்தில் புல் முளைக்கச் செய்து விட்டோம் என்று பூரிப்பு கொள்ளவும் துடித்த பூணூல் ஆட்சி, நமது தோழர்கள் மீது தொடுத்த கணைகள் சாதாரணமானவைகள் அல்ல! அனைத்தும் அக்கினியாஸ்திரங்கள் எனலாம், அவர்தம் பாஷைப்படி!

147, 148, 336, 448, 307, 114, 397, 395, 380. 424 ஆகிய இ. பி. கோ. பிரிவுகளின் படியும், இந்திய ரயில்வே சட்டம் 128-ம் பிரிவின்படியும் பயங்கரமான வகையில் 13 குற்றங்கள் அவர்கள் மீது சுமத்தப்பட்டன. சர்க்கார் தரப்பிலே 106 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். 65, சாட்சிப் பொருள்கள் வழக்கு மன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டன. 39 நாட்கள் தனி செஷன்ஸ் நீதிபதி முன்னே விசாரணை நடைபெற்றது. இந்தப் பெரிய சதி வழக்கை ஆச்சாரியாரால் நியமிக்கப்பட்ட பி.என். கிருஷ்ணய்யர் என்ற விசேஷ போலீஸ் அதிகாரி உருவாக்கினார்.

வழக்கிலே, நமது செயல் வீரர்களான தங்கப்பழம், சிவசாமி, கே. வி. கே. சாமி, நடராசன், ரத்தினம், ஆகியோரும் இன்னும் ஏறத்தாழ நூறு தோழர்களும் சம்பந்தப்படுத்தப்பட்டு அல்லலுற்றனர்-அவர்கள் சதி புரிந்தனர்—சண்டாளச் செயல்களில் ஈடுபட முனைந்தனர்—அதன் காரணமாக பல்லாண்டு தண்டனை பெற்றனர்—என்ற இனிப்பான செய்திவரும் என இளித்துக் கிடந்தது அக்கிரகாரக் கூட்டம். பல்லாண்டு காலம் சிறைமட்டுமல்ல; பலிபீடமே எதிர் வரினும் கொண்ட கொள்கையில் வழுவிடாத பண்பு படைத்த வீரர்கள் அவர்கள் என நாடு அறியும் என்றாலும் கழகத்தினர் கண்ணியமற்ற போரில் குதித்தனர் என்ற களங்கம் கழகத்தைப்பற்றிக் கொள்ளுமே; அறப்போரை மதித்திடும் நமது தூய்மையான திட்டங்களில் தூசு படிந்ததாக வையகம் கூறுமே; பொய்கூறிப்பிழைப்போர் புனைந்துரைக்கும் பொல்லாங்குச் செய்திகள் புனித இயக்கத்தை மாசுபடுத்திவிடுமே—எனக்கவலையிலாழ்ந்த கழகம், தனது களங்கமற்ற தன்மையை காசினிக்கு எடுத்தோத தொடுத்தது எதிர் வழக்கு.

கூண்டில் நம்மைப் போட்டு கொக்கரிப்பதோ அரசாங்கம்! நாமோ; தூண்டிற் புழுவெனத் துடிக்கிறோம்-அந்த நிலைமையிலே தூத்துக்குடி வழக்கு நடத்த துவங்கினோம், அரசாங்கம் சட்டத்தை நம்பியது! இ. பி. கோ. எண்களை எடுத்து வீசியது! நாமோ மக்களை நம்பினோம்—நம்மை நம்பிய அவர்கள் அணுக்கள் பைசாக்கள் என்ற வகையிலே சுமார் இருபதாயிரம் ரூபாய் தந்தனர்-அன்று பொறுப்பாளர் பதவி வகித்த **கோவிந்தசாமி எம். எல். ஏ.** அவர்கள் நாடெங்கும் அலைந்து அந்த நல்ல தொகையை வசூல் செய்தார், வழக்கு நடைபெற்றது — நமது தரப்பிலே எட்டு வழக்கறிஞர்கள் வாதாடினார்கள். தி. மு. கழகத்தின் முன்னணிச் செல்வங்களில் ஒருவரான நண்பர் **இளம்வழுதி எம். ஏ. பி. எல்.** அவர்கள் தனது சொந்த அலுவல்கள்—தொழில் துறை வேலைகள்——அனைத்தையும் துறந்து, திருநெல்வேலியிலே தங்கி வழக்குபற்றிய நடவடிக்கைகளை கழகத்தின் சார்பிலே கவனித்தார்—வழக்கை விசாரித்த அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி திரு. ராதாகிருஷ்ண முதலியார் அவர்கள் அளித்த தீர்ப்பு நமது கழத்தின் மீது தூவ இருந்த களங்கத்திற்கு நல்லதோர் தடையாக அமைந்திருக்கிறது எனக்கூறலாம்.

அனைவரும் விடுதலை செய்யப்பட்டார்கள் எனமகிழ்வு கொள்ள முடியா விட்டாலும், ஒரு வருடம், இரண்டு வருடம் என்ற வகையில் தண்டனைகள் தரப்பட்டிருந்தாலும் கூட, தீர்ப்பிலே காணப்படும் வாசகங்கள் நமக்கு சிறிது திருப்தி யூட்டுவனவாக இருக்கின்றன.

"குற்றம் சாட்டப் பட்டவர்கள் ஜூலை 15க்கு முன்பே கூடி கொலைபுரியவும், கொள்ளை யடிக்கவும், இரவில் பாலங்களைக் கொளுத்தவும், சதியிலீடு பட்டார்கள் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. சர்க்கார் தரப்பிலும் அந்தச்'சதி' நிரூபிக்கப் பட முடியவில்லை."

"போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் விளைவாக யாருக்கேனும் சிலருக்கு ஆத்திரம் ஏற்பட்டிருக்கலாம்."

"தி' மு. கழக திட்டப்படி 15ந்தேதி யன்று இரயில்களை நிறுத்துவதற்கு மட்டுமேதான் 14ந்தேதி இரவு கூடிப்பேசினார்கள் என்று கருதுகிறேன்"

தீர்ப்புதரும் மொழிகளிலே—தி. மு. கழகம் கண்யத்தை மறந்து களங்கம் நிறைந்த செயலில் ஈடுபட்டது என்ற குற்றச்சாட்டுக்கு இடமில்லை என்பது நாட்டுக்குத் தெளிவாக்கப் பட்டுவிட்டது. தண்டனைகள் விதிக்கப் பட்டிருப்பது தகாது எனக்கூறி உயர் நீதி மன்றத்திலே—மேலும் வழக்காட தி. மு. கழகம் தீர்மானித் திருக்கிறது எனினும், இந்த தீர்ப்பையும் தி. மு. க. ஒரு நல்ல வெற்றியாகவே கருதுகிறது. சதி நடத்தினார்கள் கழகத்தார் என்ற சாகசத்திலிருந்து மீண்டுவிட்ட களிப்பு பொங்குகிறது நமக்கு!

உயர்நீதி மன்றம் சென்று நமது வழக்கை மீண்டும் எடுத்துரைக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்டது கழகத்தோழர்கட்கு வேதனை அளிக்கக் கூடிய செய்தியே யாகும்.

கல்லக் குடியிலே வெற்றிக்கொடி பறந்தானபிறகு — எந்தக்கல்லக்குடிப் போருக்காக கழகத்தோழர்கள் பிடிக்கப் பட்டார்களோ—அவர்கள் எல்லாம் விடுவிக்கப் படவேண்டியதுதான் நியாயமாகும். இது அரசாங்கம் செய்யவேண்டிய அவசர வேலையுமாகும். கொண்ட கொள்கை—எடுத்த லட்சியம்—கைகூடிய பிறகும், அதற்காக கருமமாற்றிய வீரர்கள் கைதிக் கூண்டில்தான் நிற்கவேண்டுமென்ற நிலையிருப்பது வருந்தத் தக்கதாகும்—தூத்துக்குடி தோழர்களையும், கல்லக்குடி வழக்கிலீடுபட்டுள்ள கவிஞர் கண்ணதாசன், அம்பில் தர்மலிங்கம், கல்லக்குடி தம்புசாமி, ஷெரீப், ராதாகிருஷ்ணன் முதலிய பலரையும் விடுதலைசெய்து விடவேண்டியதுதான் முறையென்பதை காமராசர் மந்திரி சபைக்கு நினைவூட்டுகிறோம்—ஆச்சாரியார் வைத்த கொள்ளியை அணைத்து தீர வேண்டிய அவசியத்திலே இருக்கிறார் காமராசர், என்பதையும்—அதுவும் அவசரமாக செய்துதீர வேண்டிய பணியாகும் அது என்பதையும்-கொதித்த உள்ளத்தோடு நாடுகூறுகிறது!

கொள்ளியை அணைப்பாரா; இந்தக் குலக் கொழுந்து!—அல்லது குள்ள நரி மனிதர்வழி அவரும் நடப்பாரா? — பதில் தேவை— செயல் மூலமாக!

## தஞ்சையில் நஞ்சைத் தெளிப்பீரோ?

★

*தஞ்சை மாவட்ட ஆட்சி மன்றத் தேர்தலிலே பெரும்பாலும் காங்கிரஸ் உறுப்பினர்களே வெற்றி பெற்றிருக்கின்றனர்.*

*தஞ்சை மாவட்ட ஆட்சி மன்றத் தலைவராக இறுதி வரை இருந்து மறைந்தார் தமிழப் பெருமகனார் நாடிமுத்து அவர்கள். திராவிட விளக்கு பன்னீர் செல்வமும், தென்னகத்துச் சுடர் சாமியப்பாவும் ஆட்சி புரிந்த அந்த மாவட்ட மன்ற நிர்வாகப் பொறுப்பு, இந்த முறை ஒரு அய்யரின் கைக்கு மாற இருக்கிறது!-*

*குன்னியூர் சாம்பசிவ அய்யர் என்பார் தலைவராக வருவதற்கான சூழ்நிலைகள் அனைத்தும் உருவாகி விட்டதாகக் கேள்விப் படுகிறோம்.*

*அவரை எதிர்த்துப் போட்டியிடத் தயாராயிருந்து, இறங்கி வேலையும் செய்த தோழர் திரு வேங்கடாசலத் தேவர் எனும் காங்கிரஸ் பிரமுகர்-தமிழரை ஆதரிக்கும் இன உணர்ச்சி, தன் தோழர்களிடம் இல்லாதது கண்டு இப்போது பின்வாங்கும் நிலைபெற்றுவிட்டார் என்ற வேதனையான செய்தியும் நமக்குக் கிடைக்கிறது.*

*தேவர்—தீரமிக்க திராவிடர்—தேசீய இயக்கத்திலே நீங்காப்பற்றுகொண்ட தன்மானத் தோழர்-அவரது தோல்வி, அய்யர் ஒருவரால் நிகழ இருக்கிறது என எண்ணும்போது, தமிழர்தம் இன உணர்வு கண்டு கண்ணீர் பொங்குகிறது, நமக்கு!*

*பன்னீர் செல்வத்தின் கல்லறையும் அழத்தான் போகிறது; தஞ்சையின் வீழ்ச்சி கண்டு!*


*தஞ்சை மாவட்ட மன்ற காங்கிரஸ் உறுப்பினர்களே! உங்கள் கட்சி சார்பாக யாரைத் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் போகிறீர்கள்?*


*தேவரை வெற்றி பெறச் செய்த புலிகள் எனப் பெயர் பெறப் போகிறீர்களா?*


*பூதேவரை ஜெயிக்க வைத்து புழுவென நெளியப் போகிறீர்களா?*









[ஏற்ற இசையில் பாட]

ராமாரே ராமா ! ராமாரே ராமா !
ராமாரே ராமா—அட ராமாரே ராமா—
கோபுரத்து மேலே குந்திகிட்டு ராமா !
ஏச்சுப்பிட்டேன் என்று—இளிச்சுக் காட்டு ராமா!
ஜனங்களை ஏச்சுப்பிட்டேன் என்று,
இளிச்சுக் காட்டு ராமா !

★

கடலைத் தாண்டி பறந்து போன ராமாரே ராமா—
சிரஞ்சீவி வரம் கிடைக்குமென்பார் ராமாரே ராமா!
நீ கடலை தின்னு காலத்தை போக்குடா ராமாரே ராமா

★

காவடி தூக்குடா ராமா!
கர்ணம் போடுடா ராமா!
காவடி தூக்கி—கர்ணம் போட்டு—
வடக்கு மலையானுக்கு தெண்டம் போடுடா
ராமாரே ராமா !

★

இனி பூமாலையைப் பிச்சுப் போடாதே ராமாரே ராமா!
புதிய திட்டம் கொண்டுவாடா ராமாரே ராமா !
புள்ளைங்க படிப்பிலே மண்ணைப் போடுடா
ராமாரே ராமா!
அவுங்க
புஸ்தகத்தை கிழிச்சு போடுடா ராமாரே ராமா !
புள்ளையை
பெத்தவங்க பாத்துகிட்டா ராமாரே ராமா—
செத்துப்போவே ஜாக்கிரதை ராமாரே ராமா—

★

அடே ர
பல்டி அடிடா !
பதவி தேடுடா !
கம்பு தாண்டுடா !
கட்சி மாறுடா
பலே ! பலே! பலே!
உர் ! உர் உர் !

★

வெறுங்காயத்தைப் பெருங்காயமாக்கி விளையாடாதே
ராமா—அது
வெளிநாட்டு மருந்துகளாலும் தீராதுடா ராமா!—
தென்னஞ் சோலையில் சுரண்டித் தின்ன
ராமாரே ராமா—
தேளுகொட்டிக் கொல்லுமடா ராமாரே ராமா !

★

முந்திக்கு "ரி" போட்டா முந்திரிதான் ராமா—
தந்திக்கு "ரி" போட்டா தந்திரிதான் ராமா—இப்ப—
மந்திக்கு "ரி" போட்டா மந்திரிடா ராமா—
எழுந்திரிடா ராமா!—ராமாரே—ராமா !

[ கற்பனை ]

# ★ தெய்வராயர் ★ திருவிளையாடல்

[ தென்னரசு ]

ஏழுமலை

அன்றிரவு! வானத்துப் பரப்பில் வெள்ளி ரோஜாக்கள் கொட்டிக் கிடந்தன. துயில் முடித்த நிலவுராணி நிர்வாணக் கோலத்தில் மலர்க்காடு புகுந்தாள். வீட்டுமுத்தத்தில் படுத்துக் கொண்டு நாட்டின் நடப்பு பற்றி எண்ணிக் கொண்டிருந்த என் உள்ளத்தில் தெய்வராய அடிகளின் 'தகிடுதத்தம்' மனத்திரையில் ஓடத்தொடங்கியது.


'ஆகா, அபாரம்! அபாரம்!! உபன்யாசம் என்றால் அதல்லவா! என்ன பேச்சு! என்ன நடிப்பு! நெஞ்சிலே உத்திராக்கம் உருள, நெற்றியிலே சிவ சின்னம் ஒளிவீச, மேடைக்கு வந்துவிட்டால் வள்ளி மணாளன் வடிவெடுத்து வந்தாற் போலல்லவா இருக்கிறது. பருவம் இன்னும் தாண்டவில்லை-பக்திமார்க்க யாரறியப் போகிறார்கள். வெள்ளைக்காரன் காலத்திலே வேளைக்கு இத்தனை ரூபாய் என்று பேசி "ஆங்கிலேயர்கள் ஆண்டவனின் அவதாரங்கள்; அன்னவர்களுக்கு தென்னவர்கள் கை கொடுக்கவேண்டும் பணம், படை எல்லாம் கொடுத்துதவ வேண்டும்' என்று ஊர் ஊருக்கு யுத்தப் பிரச்சாரம் செய்தவராயிற்றே என்று யாருக்குத் தெரியப் போகிறது? சென்னை எங்கே, கோடிக்கரை எங்கே? என் பேச்சை யார் தின் கோளாறு' என்று மனச் சாந்தி பெற்றுக் கொண்டார்கள். திருஞான சம்மந்தருக்கு பால் கொடுத்த பார்வதிதேவி, அன்னவரின் புகழ்பாடும் தெய்வராய அடிகளை ஏன் பைத்தியக் காரனாக்க வேண்டுமென்று நான் துவக்கத்திலேயே கேட்டுவிட விரும்பாமல், இறுதியிலே கேட்டுக் கொள்ளலாம்—அடிகளுக்கு உண்மையிலே மூளைக் கோளாறு தானா என்று தெரிந்து கொண்ட பின் கேட்டுக் கொள்ளலாம் என்று எண்ணியிருந்தேன்.

நேரத்தில்...ஆமாம், அந்த பாதி ராத்திரி வேளையில்தான் சொல்லுகிறேன். ஒரு அபயக்குரல்! தன்னை ஒரு அரக்கன் கொன்று விடப்போகிறான், பலம் பெற்ற மிருகவெறி தன்னைபலி கொண்டு விடப் போகிறது என்று உணர்ந்து உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து எழுப்பப்பட்ட அச்சம் தோய்ந்த அபயக்குரல் தான் அது என்பது 'மட்டும் எனக்கு நன்றாகத் தெரிந்தது. ஓடினேன். குரல்வந்த திக்கைத் தேடினேன். இரவின் அமைதி, அங்கு நடைபெற்ற உரையாடலை என் காதுகளுக்கு வந்து சேர உதவியது. உற்றுக்கவனித்தேன்;

"அதிரூப சுந்தரி, ஆயிரமாயிரம் அடியார்கள் இந்தத் தெய்வராயனின் திருவாய் எப்போது மலரும் என்று காத்துக் கிடக்கிறார்களே! என் தங்கமே, என்னைப்பார், உன் சுந்தரவதனத்தையே சுற்றிச் சுற்றிவட்டமிடும் என் கண்ணைப்பார்"

## அடிகளின் அறையில் துடியிடையாளின் அபயக் குரல்!

நூல்கள் எவ்வளவு கற்றிருக்கிறார் தெரியுமா? சென்னையிலே அவருக்கு நல்ல செல்வாக்கு. பகுதிக்குப் பகுதி, வட்டத்திற்கு வட்டம் அவருடைய உபன்யாசம்தான். கடற்கரையிலே உடையாத பிள்ளையாரேன் பது பற்றிப் பேசுவார், கோயில் மைதானங்களில் எரியாத இராமயணம் என்று வைத்துக்



கொண்டு விளாசிவிடுவார். பக்தர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் அவர் — ஆனால் சுயமரியாதைக் கட்சிக் காரருக்கோ அவர் ஓர் அதிர்வேட்டு. என்னைக்கேட்டால், பக்தர் களெல்லாம் ஒன்று கூடி 'பக்த ஜனசபா' என்று ஒன்றை ஏற்படுத்தி ராஜாஜியையும், நமது இந்த தெய்வராய அடிகளையும் போதகர்களாகப் போட்டுவிட்டால் இன்னும் இரண்டே வருஷங்களில் நாஸ்திகக் கூட்டமே அழிந்தொழிந்து கேட்கப் போகிறார்கள்! தனி மரம் தோப்பாகவா போகிறது? யாரோ பொறாமைக்காரன் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறான் என்றுதான் சொல்லுவார்கள், அதுதான் பக்தர் குழாமாயிற்றே, சொல்வதை சிந்தித்துப் பார்ப்பதுதான் அவர்களிடம் அறவே இல்லையே! "பக்த கோடிகளே, பரமனின் பாதாரவிந்தங்களைத் தொட்டுக் கும்பிட வேண்டும் எனத் துடி துடித்து நிற்கும் (திரு)நீற்றுவடிவங்களே, எத்தன் ஒருவன், உங்களை யெல்லாம் ஏமாளிகளாக்கிக் கொண்டிருக்கிறானே" என்று பக்தர்களுக்காக பரிதாபப் பட்டுக் கொண்டே கண்ணயர்ந்து விட்டேன்.

மறுநாள் காலை. பத்திரிகை பார்த்தவர்களெல்லாம் கும்பல் கும்பலாக நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். பக்தர்களாக இருந்தால் முகத்திலே சோகத்தையும், பகுத்தறிவாளனாக இருந்தால் ஏளனப் புன்னகையையும் தரக்கூடிய செய்தியாக அன்றைய பத்திரிகைகள் தாங்கி வந்தன. ஆமாம்; 'தெய்வராய அடிகளுக்கு பைத்தியம்' என்று தடித்த எழுத்துக்களில் போடப் பட்டிருந்தது. கீழ்ப்பாக்கம் பைத்தியக்கார ஆஸ்பத் அதன் படியே அந்த வினா கேட்பதற்கே வழியில்லாமல் போய் விட்டது. காரணம்?? இதோ, கையும் களவுமாகப் பிடித்த போலீஸ் பழனி சொல்லுகிறார் கேளுங்கள்!

### போலீஸ்—பழனி

"சுவாமிகாள்யோகாப்பியாசம் முடிந்ததா?' என்ற சூது வாக்கியத்தில் தம்பிரான்களின் சுவை நிறைந்த காமக்களியாட்டக் காதைகளை அடக்கிக் காட்டிய 'சவுக்கடி சந்திரகாந்தா'க்கள் பார்த்திருக்கிறேன். ஆணுடை தரித்து, அரிகரதாசின் பிரதம சீடனாக நடித்து, அந்தி சாய்ந்தவுடன் பண்டாரப் பக்கிரிக்கு பஞ்ச வர்ணக் கிளியாகி, மஞ்சத்துமயிலாகி, கொஞ்சுமொழிப் பாவையாகி இறுதியிலே குற்றக் கூண்டிலேற்றப்பட்டு, "நேரடியான கேள்வி சுந்தர கோஷ், ஏன் நெற்றியைச் சுழிக்கிறாய்?" என்று கேட்கப்பட்ட 'வேலைக்காரி'களைப் பார்த்திருக்கிறேன். அப்போதெல்லாம் "இது அபாண்டம்! பொய்!! ஒரு நாளும் இப்படி நடக்காது!" என்று எண்ணியதுண்டு; ஆனால் நேற்று?

இரவு பன்னிரெண்டு மணி! அன்று எனக்கு புரசைவாக்கம்

"சுவாமி, சீதா தேவியின் கற்பு மேம்பாடு, ஸ்ரீராமனின் நல்லொழுக்கம் இவைகளைப் பற்றிப் பேசிய நீங்களா இப்படி நடந்து கொள்கிறீர்கள்! குரலை இனிதாக்க கஷாயம் தருவதாக சொல்லியல்லவா கூட்டிவந்தீர்கள்! குருநாதா, கூடப்பிறந்தவளாக எண்ணுங்கள் என்னை. கூடிக்குலாவி, விடிந்தவுடன் ஓடிப்போகும் குச்சுக்காரியல்ல



நான். எச்சரிக்கிறேன்; என் தந்தை செல்வாக்கு மிக்க சீமான், இந்த வட்டாரத்தில் எதையும் சாதிக்க வல்லமை பெற்றவர். ஜாக்கிரதை!"

"சுந்தரி, உன் குறுவளிப் பேச்சுக்கு சரணடைந்து விடுவேனென்று நினைக்கிறாய்! பஜனை மடமும், பகவான் வழிபாடும் இப்போது தேடிக்கொண்டதடி

## பட்டைச் சாராயம் பளிங்கு ஜாடியில்—பரிமளகந்தம் நாற்றம் துடைத்திட!

போய்விடும்" — பக்தர்கள் ஒவ்வொருவரும் இப்படித்தான் பேசித்தீர்த்தார்கள் அந்த அடிகளைப் பற்றி. "யார் அந்த அடிகள்? ஏன் வந்தார் அவர் பக்தோபதேசத்திற்கு?" என்று யாருக்குத் தெரியப் போகிறது? வளர்ந்து வருகிறவர்களை எதிர்ப்பதாக நடித்துக் கொண்டே வயிற்றைக் கழுவிக் கொண்டு வருகிறவர் அவர் என்பதை திரிக்கும் அவரை கூட்டுச் சென்று விட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. "ஐயோ இது சுயமரியாதைக் கட்சிக்காரர்களின் சூழ்ச்சி என்றும் சொல்வதற்கில்லையே; அவர்கள் ஏவல், சூன்யத்தில்நம்பிக்கையில்லாதவர்களாயிற்றே" என்று மெய்வருந்திய மெய்பன்பர்கள், சிவநேசச் செல்வர்கள் அனைவருமே 'அடிகள் அதிகம் படித்த பகுதியிலே "நைட் டியூட்டி"! சுடுகாட்டில் சிறகடித்துத் திரியும் ஆந்தையைப் போல நிம்மதியான அந்த நிசி வேளையில், கைத்தடியால் தரையில் தட்டியபடி அலைந்துகொண்டிருந்தேன். கிராமத்துப் பன்றிக்குட்டிகளையொத்த சென்னை நகர் பெருச்சாளிகள் என்னைப் போலவே அவைகளும் கடமையைச் செய்து கொண்டிருந்தன. அத்

ல்

புக்கம்

இதயராணி. பரங்கியர் காலத்திலே எனக்கு 'பக்கா ரவுடி' என்று பெயர், நினைவிருக்கட்டும். வா, என் சொல்லைத்தட்டாதேடி சுவைமொழிப்பாவாய்!

'தூ!"

— இப்படி ஒரு பேய்க் கூச்சல். அந்தக்குரலை கற்பனை

ன் செய்து பார்த்தால், பாயவரும்

(8-ம் பக்கம்)




## வலைவீச்சு !

## 12

துக்காராம் சைக்கிளைப் பிடித்துக் கொண்டே நிற்க, அவனருகே அம்பலம் நெருங்கிச் சென்று "உங்களிடம் ஒரு முக்கிய சமாச்சாரம் பேச வேண்டும்!" என்று குழைவாகச் சொன்னார். "என்னிடம், முக்கிய சமாசாரமா? அடேடே என் வாழ்க்கையிலேயே இப்பதான் இப்படி ஒரு ஆளைப் பார்க்கிறேன். என்னெய்யா முக்கிய சமாசாரம்?" என்று இளித்துக் கொண்டே கேட்டான் துக்காராம்.

"தெருவிலே நின்றுகொண்டா பேசுவது? வாங்களேன் கடைக்குப் போவோம்!"

"மணிக்கணக்கா பேச வேண்டிய சமாச்சாரமோ? எனக்கு அவசரமா வேலையிருக்குதே!"

"அப்படியொண்ணும் பெரிய விஷயம் இல்லே, கடையிலே போய் உட்கார்ந்து பேசலாமென்று நினைச்சேன்-அவ்வளவுதான்!"

"அது சரி; நீங்க எந்த ஊரு?"

"நான் இருக்கிறது மருங்கப் பள்ளம்!"

"என்ன? மருங்கப் பள்ளமா?"

துக்காராமின் உள்ளத்தில் புதிய உற்சாகம் கரை புரண்டது. தன் நெஞ்சங் கவர்ந்த பரிமளாவின் சொந்த ஊரும் மருங்கப்பள்ளம்தான் என்று அவன் முன்பே அறிவான். அம்பலமும் அவள் ஊர்தான் என்றதும் அவளைப் பற்றிய நிறைய விபரங்களை சேகரிக்கலாம் என்று மனக்கோட்டை கட்டினான். ஒருசமயம் பரிமளாவே மனம் உருகி, இறுதியாக இந்த ஆளை அனுப்பி வைத்திருக்கிறார், போலும் தூதாக-என்றும் கற்பனை செய்து கொண்டு களிப்படைந்தான். இந்த ஆசாமி பரிமளாவின் தகப்பனாராக இருந்து விட்டால் என்ன செய்வது; தான் பரிமளாவிடம் நடந்துகொண்ட குறும்புத்தனமான நடவடிக்கைகளுக்கு தண்டனை தருவதற்காக அவரே நேரில் வந்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையே என்றும் சிறிது அஞ்சினான். இந்த எண்ண அலைகள் அவனை சிறிது நேரம் மௌனத்திலாழ்த்தியது.

"என்ன தம்பி பேசாம நிற்கிறீங்க?" என்று கேட்டார் அம்பலம்.

"ஒன்றுமில்லை-வாருங்கள் கடைக்கே போகலாம்" என்று அம்பலத்தை அழைத்துக் கொண்டு துக்காராம் கடைக்குப் புறப்பட்டான். அம்பலம் வாயிலிருந்து எத்தகைய வார்த்தைகள் உதிரப் போகின்றனவோ என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டே உட்கார்ந்தான் துக்காராம். அவனுடைய நண்பர்கள் எல்லாம் முன்பே போய்விட்டது அவனுக்கு இப்போது மகிழ்ச்சியாக இருந்தது.

"டேபையா! போயி இரண்டு கிளாஸ் டீ வாங்கிட்டு வாடா!"

"வேண்டாம் தம்பீ-நான் டீ சாப்பிடுற பழக்கமே இல்லே!" என்றார் அம்பலம்.

"காப்பி சாப்பிடுங்க - ஏ, காபி வாங்கிட்டு வாடா!"

"ஐயோ - காபியா? ஊஹூம்!"

"சரி! சோடா! - பையா - போடா!"

"சோடாவே தொடமாட்டேன்!"


"கிரஷ்—?"

"ஏன் அனாவசியமா செலவு-எனக்கு அந்த சீனித் தண்ணிகளே புடிக்காது-காசு போற தெண்டம்!"

"பாதாம்கீர் சாப்பிடுங்களேன்-"

"அடாடா- விடமாட்டீங்க போலிருக்கு-சரி-உங்க ஆசையைக் கெடுப்பானே?"

"பாதாம் கீர் வாங்கிட்டு வாடா பையா!" என்று கூறியபடி துக்காராம் மணிப்பர்சை திறந்தான் காசு எடுப்பதற்காக! பர்ஸில் ஒரு அணாவோ இரண்டு அணாவோதான் இருந்தது. அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல்- "ஓகோ!-நூறுருபா தாளா இருக்குதோ-சரி-சரி இந்தா! போயி சில்லறை மாத்தி பாதாம் கீர் வாங்கிட்டுவா!" என்று பர்சை பையனிடம் மூடியபடி விட்டெறிந்தான். எஜமானனுடைய தந்திரத்தைப் புரிந்து கொண்ட பையனும் பர்சுடன் ஓட்டமாக ஓடிவிட்டான். அவனுக்கு ஊர் சுற்றிப்பார்க்க சில மணிநேர ஓய்வு கிடைத்ததே என்ற சந்தோஷம்.



பையன் போன பிறகு துக்காராம், அம்பலத்தைப் பார்த்து சமாச்சாரத்தை அறிந்துகொள்ளும் ஆவலை தன் முகக் குறிப்பின் மூலம் வெ
யிட்டான்.

"மருங்கப் பள்ளத்திலே உங்களுக்கு யாரையாவது தெ
யுமா?" அம்பலத்தின் இந்த
கேள்விக்கு உடனடியாக பதி
சொல்ல துக்காராம் தயங்கி
பிறகு தன்னைத்தானே சமாளி
துக் கொண்டு, "ஆமாம்-தெ
யும்!" என்றான்.

"தெரிந்த ஆள் — ஆ
பெண்ணா?"

"இது ஏன் இந்த புதிய கே
வியைக் கேட்கிறீங்க-யார்
யிருக்கணும் என்று நினைக்
றீங்க-நீங்க?"

"பதினாறு முழம் என்
தான் நினைக்கிறேன்-"

"இல்லே-தப்பு! பன்னிரண்
முழம்தான் இப்போதெ
லாம்!" என்று கூறிவிட்
சிரித்தான் துக்காராம்.

"குறும்புக்காரத் தம்பிதான்
அதான் அந்தப்பெண்ணு சொ
கிப்போயி கிடக்கு!"

துக்காராம் வெட்கத்தா
தலைகுனிந்து கொண்டான், ப
மளாவிடமிருந்து தித்திப்பான
சேதியொன்று வந்திருப்பதா
யூகித்துக் கொண்ட துக்
ராமினால் மகிழ்ச்சியைத் தாங்
முடியவில்லை.

"பரிமளா ஏதாவது சே
சொல்லி அனுப்பியதா?"
என்று அவசரமாகக் கேட்டு
விட்டான் அவன்.

"அடிசக்கை! பேரை
சொல்லிட்டீங்களே தம்பீ
உம்; காதலுக்கு கண்ணு ஏ
யாராயிருந்தாலும்-அவுங்கயா
என்னண்ணு பாக்காம-பேசி
றதுதான் காதல் லக்ஷணம்ன்
சொல்லக் கேட்டிரு
கேன். எங்க காலத்திலே எ
லாம் காதலாவது கத்தரிக்க
யாவ்து-இப்பத்தான் அ
யெல்லாம் கேள்விப்படுறோம்
என்றார் அம்பலம்.

"என்ன அப்படி சொல்லி
டிங்க! உங்க காலத்தி

Filmed as bound

காதல் இல்லியா? உங்க முப்பாட்டன் காலத்துக்கு முன்னயே காதல் இருந்திருக்கு!-நேத்திகூட வள்ளித்திருமணம் நாடகம் பாத்தேன்-வள்ளியும் முருகனும் காதலை அள்ளி அள்ளிப் பருகிறுங்களே-அடா அடா! அதிலே ஒரு காதல் பாட்டு வருகிறது.கேளுங்கள்!'' என்று ஆனந்த மிகுதியால் துக்காராம் பாடவே ஆரம்பித்துவிட்டான்.

"காயாத கானகத்தே!" என்ற பாட்டை ஆரம்பித்து, "மேயாதமான்! புள்ளி மேவாத மான்! எந்தன் மேயாதமான்!" என்று பிர்க்காக்களை உருட்ட ஆரம்பித்தான்.

"சரிதான் காதலிலே அரைப் பைத்திய மாகியிருக்கிற தாக்கும்!" என்று நினைத்துக் கொண்ட அம்பலம் அவனது பாட்டை அருமையாக ரசித்தார்.

"தம்பி! காதல் ரொம்ப காலமா உலகத்தை ஆட்டி வைக்குது- ஆண்களை பைத்திய மாக்குது- பெண்களை பித்துக்குளி ஆக்குது - என்பதை ஒரு பாட்டாலேயே விளக்கிட்டுங்க!"

"பாட்டு மாத்திரமா? இதோ வசனம் கேளுங்க! "ஏ—குறவள்ளியே! கொண்ட காதலை கண்ட துண்ட மாக்காதே! தினைப்புனத்திலே ஆலோலம் பாடிக் கொண்டிருக்கும் உன்னை தாலேலோ பாடும் தாயாக மாற்ற இந்த வேடன் விரும்பி விட்டான்! சாதல் நிலவே! ஆசை நட்சத்திரமே! இன்ப சூரியனே! நேச வானமே! பாச விளக்கே! மோசம் பண்ணுதே! மோடி செய்யாதே!"

"போதும் தம்பீ போதும்! காதலைப் பற்றி ஒரு கால க்ஷேபமே பண்ணி விடுவீர் போலிருக்கு!"

"அதில் என்ன ஆக்ஷேபணை! இதோ கேளுங்க காலக்ஷேபத்தையும்!— சந்திரனுகப் பட்டவன் தாரையின் முகார விந்தத்திலே மயங்கியவனுய் அவள் தன்னுடைய குரு பத்தினி என்பதையும் மறந்து அவளோடு கூடுவதற்கு புறப்பட்டான். அதைப் போலவே அந்த தாரையாகப் பட்டவள், சந்திரனுகப் பட்டவன் தன்மாணவன் என்பதை மறந்து அவனேடு கூடுவதற்கு உடன் பட்டாள். தாரையின் ரூபலாவண்யமோ ரதியையும் மிஞ்சக் கூடியது! சந்திரனின் ரூபலாவண்யமோ மன்மதனையும் மிஞ்சக் கூடியது! இருவரும் இன்பமாக இருந்தபோது தாராதேவியாகப் பட்டவள் அளித்த முத்தங்களின் வடுக்கள்தான் இன்றைக்கும் சந்திரனின் முகத்திலே கருப்பாகத் தெரிகிறது. அதைக்களங்கமென்று புகல்வார்கள் காதல் மகத்துவம் புரியாதவர்கள். தாரையினுடைய கணவனுக்குவேண்டுமானுல் சந்திரனின் முகத்திலேயிருக்கிற கருப்பு களங்கமாயிருக்கலாம் என்று கூறலாம். இப்படியாகத்தானே சந்திரனும் தாரையும் பாபச் செயலிலே ஈடுபட்டு, குருவின் சாபத்திற்கு ஆளானுர்கள்."

"பலே தம்பி-பலே! காதலைப் பத்தி ஒரு ராமாயணமே எழுதுவீங்க போலிருக்கு!"

"அதுவும் எழுதியிருக்கிறேன்-இதோ!" என்று அங்குள்ள பெட்டியைத் திறந்து ஒரு பெரிய நோட்டுப் புத்தகத்தை எடுத்து அம்பலத்திற்கு முன்பு விரித்துக் காட்டினுன்.

"இந்தக் கதைக்குப் பெயர்; 'இன்ப லோகம் அல்லது இரண்டு ஜோடிப் புருக்கள்,'. இதை எழுதி முடித்து ஒருவாரமாகிறது. இதில் வரும் கதாநாயகிக்குப் பெயர் பரிமள காந்தி என்பது."

"ஓகோ — அந்தப் பெயரையே..."

"ஆமாம் — ஞாபகார்த்தமாக!—இந்தக் கதையில் வரும் சம்பவங்கள் எல்லாம் ஒரே பயங்கரம்! ஒரே காதல்! ஒரே மர்மம்! ஒரே திடுக்கிடல்! ஒரே மகிழ்ச்சி! ஒரே மோகம்! ஒரே சோகம்! ஒரே வேகம்!"

"ஒரே தாகம்!"


"உம்—அதுவுமிருக்கு!"

"இல்லைதம்பி — கொஞ்சம் தண்ணிவேணும்!"

"ஓகோ! இதோ தர்ரேன்— அடேடே, பாதாம்கீர் வாங்கப் போனவன் ஆளையே காணுமே—" என்று தண்ணீரை அவரிடம் கொடுத்துவிட்டு மீண்டும் நோட்டை விரித்தபடி; "இந்த இன்ப லோகக் கதையிலே, ஒரு விசேஷம் என்னவென்ருல்; காதலர்கள் ரெண்டுபேரும் செத்துப்போயிகூட அவர்களை ஆசிரியர் விடவில்லை. அதாவது நான் தான் ஆசிரியர்! என்ன செய்திருக்கிறேன்னு, செத்த காதலர்கள் இருவரும்—மேல் உலகத்திலே போயி ஜாலியா இருக்கிருங்க!—அங்கேயும் ஒரு வில்லன் வர்ரான்—அங்கேயும் சண்டை சச்சரவு—இப்படி வச்சுட்டேன் — கடைசியாக பரமசிவன் தலையிட்டு, அந்த வில்லனை நரகலோகத்துக்கு அனுப்பிவிட்டு, காதலர்கள் இருவரையும் சேர்த்து வைக்கிருர் என்று கதை முடிகிறது"

"நல்ல முடிவு தம்பீ!"

"இந்தக்கதையை என் சினேகிதர் ஒருவர் படித்துவிட்டு இதை இங்கிலீஷிலே மொழி பெயர்க்கலாம் என்று துடியாய்த் துடிக்கிருர்—முதல்லெ, தமிழிலே வெளியிடுறதா—இங்கிலீஷிலே வெளியிடுறதா — அப்படிங்கிற சந்தேகத்திலே கதையை அச்சுக்குக் கொடுக்க தயங்கி கிட்டு இருக்கேன்"



"ஆண்டவன் புண்யத்திலே அச்சாகி வரட்டும்"

"இதிலே ஒரு இடம்—படிக்கிறேன் கேட்கிறீங்களா?"

"அப்புறம் சாவகாசமாக படிக்கலாம் தம்பீ—இப்ப வந்த விஷயத்தைப் பேசிவிடுகிறேன்."

"என்னவிஷயம்? —அதைச் சொல்லுங்க"—

"நீங்க—என்னேட நம்ப ஊருக்கு வரணும்?"

"மருங்கப் பள்ளத்துக்கா?"

"ஆமாம்!"

"ஏன்—எதற்காக?"

"பரிமளாவுக்கும் உங்களுக்கும் ஒருமாதிரி இருக்கிற விஷயம், அவுங்க அப்பாவுக்கு தெரிஞ்சு போச்சு!"

"அய்யோ!"

"பயப்படாதிங்க—அந்தப் பெண்ணு உங்கமேலே உயிரை வச்சிருக்கு—"

"ஆகா—அதிலென்ன சந்தேகம்?"

"நான் ஒருமாதிரி அவுங்க அப்பனை சமாதானம் பண்ணி வச்சிருக்கேன். அவன் உங்களை பாத்துட்டான்னு சரின்னு சொல்லிடுவான்— நான் வந்து பரிமளாவுக்கு மாமன் முறை வேணும்—எனக்கு அந்தப் பெண்ணு மேல உயிருதான்! அது இஷ்டத்துக்கு விரோதமா என்னுலெ நடக்க முடியாது— நீங்க ஊருக்கு வந்தா கல்யாணத்தை ஒரு தினுசா முடி பண்ணி விடலாம்—"

"பரிமளா என்ன சொன்னது?

"உங்களை அழைத்துவரும் படி அதுதானே விலாசமெல்லாம் கொடுத்தது!"

துக்காராமினுல் சந்தோஷத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமலிருக்க முடியவில்லை. அவருடன் மருங்கப்பள்ளம் புறப்படுவதற்குத் தயாரானுன்.

★ ★ ★

துக்காராமும், அம்பலமும் மருங்கப்பள்ளம் கிராமத்தின் எல்லையை அடைந்து விட்டார்கள்.

"கிராமம் மிகவும் அழகாயிருக்கு" என்றுன் துக்காராம்.

"கிராமம் ஏன் அழகாயிருக்காது! கிளியல்லவா இருக்கிறது இங்கே!" என்று கிண்டல் செய்தார் அம்பலம். துக்காராம் பெண் போல நாணிக் கொண்டான். மருங்கப் பள்ளத்து சிவன் கோயிலுக்கு கொஞ்ச தூரத்தில் இருவரும் வந்து கொண்டிருந்தார்கள், அப்போது அம்பலத்திற்கு துக்காராமிடம் ஏதாவது குறிப்பறிய வேண்டும் என்ற அவசர புத்தி உதயமாயிற்று. ஆசைக்காரனல்லவா அவர். ஆகையால் அவர் துக்காராமைப் பார்த்து, "அதோ அந்த கோயிலை நீங்க பார்த்திருக்கீங்களா தம்பீ?" என்று கேட்டார். எந்தவித முகமாற்றமும் காட்டாமல் துக்காராம், "இதுமாதிரி எத்தனையோ கோயில் பார்த்திருக்கேன்" என்று பதில் கூறினுன். அதற்குமேல் அவனை குறுக்கு விசாரணை செய்து தன் குறிக்கோளை கெடுத்து விடக்கூடாது என்று எண்ணிய அம்பலம், துக்காராமை அழைத்துக்கொண்டு தன் வீடு உஸ் நடந்தார்.

பாயங் த முயன் ஆனல்,

[வளரும்]

10-ம் பக்கம்

# ‘சத்திய வேந்தர்’களின் கண் காணிப்பில்!

★

கத்தியின்றி ரத்தமின்றி சுதந்திரம் பெற்ற சத்திய வேந்தர்களின் ஆட்சியில் நடை பெற்றிருக்கும், மனித சமுதாயம் வெறுக்கும் கோரச் செயல்களின் பட்டியலை இந்திய சர்க்காரின் உள் நாட்டிலாகா தருகிறது பாருங்கள்.

### கிரிமினல்

1953ம் ஆண்டில் இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் மொத்தம் 6, 12, 010 கிரிமினல் குற்றங்கள் பதிவு செய்யப் பட்டிருக்கின்றன. இதில் அதிக எண்ணிக்கையை பங்காகப் பெறுவது சென்னை மாநிலம் என்று சொல்லப் படுகிறது. சென்னை ராஜ்யத்தில் மட்டும் 95, 826 கிரிமினல் குற்றங்கள் பதிவு செய்யப் பட்டிருக் கின்றன. அடுத்தது பம்பாய். அதன் பங்கு 74, 897 குற்றங்கள்.

### பெண் கடத்தல்

இந்தத் திருப்பணியில் முதன்மை பெற்று விளங்குவது உத்திரப் பிரதேசம். கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டிலும் இம்மாதிரி வழக்குகள் உத்திரப் பிரதேசத்தில் 1568 பதிவாகியிருக்கின்றன. இது போலவே பம்பாயில் 1358ம் ராஜஸ்தானில் 1012ம் பதிவாகியிருக்கின்றன.

### வழிப்பறி

இந்தத் தொழிலில் கை தேர்ந்தது பீஹார் மாநிலம்தான், —சர்க்காரின் புள்ளி விபரமே காட்டுகிறது. 1953ம் ஆண்டில் 1283 வழிப்பறிக் கொள்ளைகள் நடை பெற்றிருக்கின்றன.

### கொலை

இதில் எல்லா மாநிலங்களும் ஒன்றுக் கொன்று போட்டியிட்டிருக்கிறது. உ.பி.யில் 1952ல் 1476 கொலைகளும் 1953ல் 1590 கொலைகளும், பம்பாயில் 1952ல் 1499 கொலைகளும் 1953ல் 1392 கொலைகளும் சென்னையில் முறையே 1631, 1850 கொலைகளும் நடந்திருக்கின்றன. 1953ல் இந்தியத் துணைக் கண்டத்தில் நடைபெற்ற மொத்தக் கொலைகள் 6967 — நாம் சொல்ல வில்லை; சர்க்காரின் குறிப்பே காண்பிக்கிறது.

### வீடு புகுந்து திருடுதல்

இந்தியா முழுவதிலும் 1952ல், 150809ம், 1953ல் 142515ம் நிகழ்ந் திருக்கின்றன. இதில் மாநிலங்கள் ஒன்றுக் கொன்று சளைத்தவைகளாகத் தெரியவில்லை.

### கள்ள நோட்டு

இதில் முன்னணியில் நிற்பது பீஹார். 1953ம் ஆண்டில் 355 கள்ள நோட்டு வழக்குகள் பதிவாகியுள்ளன.

### கள்ள நாணயம்

1953ல் உத்திரப் பிரதேசத்தில் 81 வழக்குகளும் மத்திய பிரதேசத்தில் 63 வழக்குகளும் பதிவாகியுள்ளன.

‘அறம் வளர்ப்போம்’ என வானதிர முழங்கியவர்கள் ஆட்சிக் குடை பிடித்தபின் நடைபெற்றுள்ள ‘கைங்கர்யங்கள்’ இவைகள். இதில் எவை எவை எத்தனை; எத்தனை, ஆட்சியின் கொடுமையால் விளைந்தவைகளோ?

## பல்லக்கு....

[ 2-ம் பக்க தொடர்ச்சி ]

காஷ்மீரச் சிங்கமென்று போற்றப் பட்ட ஷேக் அப்துல்லா சென்ற ஆண்டு சிறை படுத்தப் பட்டது நினைவிருக்கலாம். ஆண்டு ஒன்றும் முடிந்து விட்டது—அந்த சிங்கம் இன்னும் விடுவிக்கப் படவில்லை.

“தள்ளாத வயதில் எல்லைப் புற காந்தியை சிறைச்சாலையில் தள்ளி, தொல்லை தருகிறார்களே; பாக்’ சர்க்காரின் இந்த ஏகாதிபத்திய வெறி எப்போதுதான் அடங்குமோ?’—என்று உக்கிரமான மொழியில் காட்டுக் கூச்சல் கிளப்பிய தேசிய ஏடுகள் ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்ய வேண்டியதன் அவசியம் பற்றி வாய் திறக்கவேயில்லை.

அதிகார போதை பருகிய ...ளையன் செய்த தவறுகளைத்தான் இந்த பாரத புத்ரர்களும் செய்கிறார்கள். கான் சகோதரர்களை கௌரவிப்பதன் மூலம் முஸ்லிம்லீக் திருந்தி விட்டது. கபர்கானுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகளும் விரைவிலே நீக்கப்பட்டு விடுமாம்.

காங்கிரசோ இன்னும் திருந்தும் நிலையிலில்லை. பாசிச வெறியர்கள் சென்றபாதையிலே திரும்பவும் தாராள நடை போட்டபடி இருக்கிறது.

லீக் திருந்திவிட்டது; பாகிஸ்தான் மக்கள் நல்லதோர் பாடம் கற்பித்த காரணத்தால்!

இந்நாட்டு மக்களும் சரி பாடம் கற்பிக்காவிட் ...ங்கிரஸ் மட்டும் எவ் ...தும்?



★

## தெய்வராயர்....

[5-ம் பக்க தொடர்ச்சி]

காளையைக்கண்டு பதறியழும் பச்சைக் குழந்தையின் பரிதாபக் குரலைப் போன்றிருந்தது. ஒரு கணம் நின்று கவனித்தேன். அந்த சோக நாடகம் தெருக் கோடியிலிருந்த சுகுணவிலாஸ் ஹோட்டலில்தான் நடைபெறுகிறது என்பது தெரிய வந்தது

ஹோட்டல் சுகுணவிலாஸ் அந்த வட்டாரத்திலேயே பெயர் பெற்ற ‘தங்குமிடம்’. வசதி மிக்கோருக்கு அது வசந்த மாளிகை-புதுமைப் பூங்காவனம்.

வேகமாக நடந்தேன்; ஓசை பெரிதாகிக் கொண்டே வந்தது. அல்லல்பட்ட அந்தப்பெண்ணின் அபயக்குரல் அழுகுரலாயிற்று. அவளுடைய வேதனை கீதத்திற்கு தன்னுடைய தேம்பலையே தாளமாக்கிக் கொண்டு தவித்தாள் அந்த பெண் திலகம்.

ஹோட்டலுக்குப் பக்கத்திலே பெரிய வேப்பமரம். அதில் ஏறி ஜன்னல் வழியாக ஓட்டலுக்குள் பார்த்தேன்.

“கொடிது கொடிது காமம் கொடிது—அதனினும் கொடிது பக்தனின் காமம்” என்று அவ்வையார் பாடலைத் திருத்தம் செய்யவேண்டும்போல் தோன்றிற்று அந்தக் காட்சியைக்கண்டவுடன். சொர்ணபிம்பம் போன்ற பருவமங்கை ஒருத்தி சோர்ந்து போய் கிடந்தாள். மிருக வெறி கொண்ட மனித உருவம் ஒன்று ஆடுதின்ற ஓநாயைப் போல உருமிக்கொண்டே உலாத்தியபடி இருந்தது.

கண்ணாடிக் கோப்பைகளும், பொன்னிற வளையல்களும் புண்ணாகிப்போன பூவையின் உள்ளத்தைப் போல சுக்கல் நூறாகிக்கிடந்தன. சாய்ந்திருந்த பூப்போட்ட பளிங்கு கூஜாவிலிருந்து தெளிந்த திரவம் கொட்டிக் கொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து எங்கிருந்தோ பரிமள கந்தமும் மணம் வீசாமலில்லை. ஆசாமியைப்பார்த்தால் கோயில் பூசாரியைப்போல் தோன்றியது.

இரு கைகளிலும் தங்கத் தாயத்து. விரல்களில் சிவப்புக் கல் பதித்த தடித்த மோதிரம். உருளைக் கிழங்கைப் போல வாட்டசாட்டமான உருவம்.

அடுத்த நிமிடம் நான் அங்கு நிற்கவில்லை. எனது சகாக்கள் புடை சூழ ஓட்டலுக்குள் படையெடுத்தோம். “அப்படி யொன்றும் நடந்திருக்காதே—தங்கியிருப்பவர் சாமான்யரல்லவே-, தெய்வராய அடிகளாயிற்றே” என்றார் ஹோட்டல் உரிமையாளர். எனக்கோ ஆத்திரம் தாங்கவில்லை—“வாரும் காண்பிக்கிறோம்” என்று அவரையும் உடன் அழைத்துக் கொண்டு மாடிக்குச் சென்றோம். மதுவாடை மூக்கைத் துளைத்தது. உரிஞ்சப்பட்ட நொங்குக் கூடாக அந்த ஊர்வசி பிரக்ஞையற்று குப்புறக் கவிழ்ந்துகிடந்தாள். அடிகளின் உதடுகளின் இடுக்குகளிலிருந்து இரத்தம் கசிந்த கறை மட்டும் தென்பட்டது. பிறந்த மேனியோடு ஏதேதோ வாயில் வந்தபடியெல்லாம் உளறிக் கொண்டிருந்தார். பிரக்ஞையற்றுக் கிடந்த அந்தப் பெண்ணை புரட்டிப் பார்த்தோம். அந்தோ பரிதாபம்! காவியுடையின் மகிமை பற்றிப் பேசும் அந்தக் காமுகனால் மங்கையின் கன்னக் கதுப்புகள் காயப்படுத்தப்பட்டிருந்தன. அந்த ரத்தம் தான் அவனின் பல்லிடுக்குகளிலிருந்து வடிந்ததோஎன்னவோ!

“அடிகளுக்கு பைத்தியம்” என்றார் சப் இன்ஸ்பெக்டர்.

“இல்லை” யென்றேன்.

“எதற்கும் சோதித்துப் பார்க்கலாம்” என்று கருதி இருவரையும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம்.

நாளடைவில்—இல்லை-இல்லை-சில மணி நேரத்திற்குள் அந்த கபட வேடதாரியின் நாடகம், அனைவருக்கும் புரிந்துவிட்டது. ‘ஒரு பெரியஇடத்துப்பெண்ணை கடத்தி வந்து பேரின்பத்தில் திளைக்கலாம் என எண்ணி, மதுவுண்டு, பக்கத் தறையில் வைத்து பூஜித்த தன் மகேஸ்வரனிடம் விடை பெற்று, சரச, சல்லாப, உல்லாச லீலை நடத்த முற்பட்டார்; போதை அதிகரித்தது—வெறியாட்டம் போட்டார்—விஷயம், வெளியிலிருந்த போலீசாருக்கு எட்டவே புத்தி பேதலித்தவரைப் போல நடித்தார். பெருந்தலைகள் தலையிட்டு மழுப்பி விட்டார்கள்” இந்த உண்மை எப்படியோ பொது மக்கள் காதுக்கு எட்டிவிட்டது இப்போது, எந்த ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டுமோ அந்த ஆஸ்பத்திரியில் அடிகள் இருக்கிறார்.

உடையாத பிள்ளையாரையும் எரியாத ராமாயணத்தையும் நினைப்பவர்கள் அடிகள் அடைந்திருக்கும் ஆனந்த நிலையை எண்ணி எண்ணி நெக்கு நெக்காக உருகத்தான் செய்கிறார்கள். என் செய்வது “உலகேமாயம், வாழ்வேமாயம். காணும்சுகமே மாயம்” என்று ஊருக்கு உபதேசிக்கும் உபன்யாசகர்கள் நடத்தும் லீலா விநோதங்களில் இது ஒரு ‘புது அரங்கேற்றம்!


### நன்றி

●

நான் வட ஆற்காடு மாவட்ட ஆட்சி மன்றத் தேர்தலில் காங்கிரசை எதிர்த்து வெற்றி பெற்றமை குறித்து, என்னைப் பாராட்டி கடிதங்களும், தந்தியும் அனுப்பிய கழகத் தோழர்களுக்கும், நண்பர்களுக்கும், வாக்காளர்களுக்கும் தனித் தனியே பதில் எழுத இயலாமையால் யாவருக்கும் உளங்கனிந்த நன்றியை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்

அன்பன்

எ. எல். சி. கிருஷ்ணசாமி




# ★ நம்பவே நம்பாதே! ★

## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

“பரிட்சையில் தேர்வதற்காக பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்கிறார்களே, ஏன்?”- பழனியிலிருந்து ஒரு தங்கை கேட்டிருக்கிறது இந்தக் கேள்வியை.

பிள்ளையாருக்கு தேங்காய் உடைப்பது மூட நம்பிக்கை தான்! அத்தகைய மூட நம்பிக்கைகள் நம் நாட்டில் அதிகம்; அதனால் ஏற்படும் தீமைகளும் அதிகம்! அத்தகைய மூட நம்பிக்கையை விளக்கும் கதை ஒன்று சொல்லுகிறேன், கேளுங்கள்:

* * *

ஒரு குருட்டுப் பாப்பா. வயதென்னவோ பத்துதான் இருக்கும். செல்லமாக வளர வேண்டிய வயது. ஆனால் அவள் பிச்சைக்காரியாக அலைந்தாள்.

“அம்மா! தாயே! கண்ணில்லாத கபோதியம்மா!” என்று அவள் பிச்சைக் கேட்கும் போது எனக்கு என்னவோ போலிருக்கும். சமயத்தில் அழுகைகூட வந்துவிடும். அவளுக்கு அப்பா இல்லையா?–அம்மா இல்லையா?-யாருமே துணை இல்லையா? –இந்த சந்தேகம் வந்துவிட்டது எனக்கு. ஒரு நாள் அந்தக்குருட்டுச் சிறுமியைக் கேட்டும் விட்டேன்.

அவள் விம்மினாள். அழுதாள். பதிலும் சொன்னாள். அது மிகவும் நீண்ட பதில்; ஒரு சோகக் கதையை உள்ளடக்கிய பதில். இதோ அந்தக் கதை.

அந்தச் சின்னத் தங்கை ‘பிச்சைக்காரி’யாக மாறுவதற்கு முன் நல்ல நிலையில் தான் இருந்தாள். அப்படியென்றால், அவளுக்கு மாளிகை இல்லை; மோட்டார் வண்டி இல்லை; பட்டாடைகள் இல்லை ஆனால், அவளுடைய பாட்டி இருந்தாள்! அந்த ஆசைப் பாட்டிதான் அவளது ஒரே சொத்து. இருக்காதா? பிறக்கும்போதே அம்மா இறந்தாள்; இரண்டாவது வயதில் அப்பாவும் இறந்தார். அந்தச் சின்ன வயதிலேயே அனாதையைப் போல் ஆகிவிட்ட அவளை, கண்ணின் மணி போல் காத்து வந்தது அந்த ப்பாட்டிதான். பாட்டிக்கு அந்தப் பாப்பா துணை; பாப்பாவுக்கு பாட்டி துணை; இருவருக்கும் தினசரிக் கூலி வேலைகள்தான் துணை!

மகிழ்ச்சியுடன் ஓடிக் கொண்டிருந்தது அவர்கள் வாழ்க்கை. ஆனால்...? அந்த சந்தோஷம் சாம்பலாகும் தினமும் வந்து விட்டது. அப்பப்பா! என்ன பயங்கரம்! ஒரு நாள் நல்ல மழை! ‘ஓ’வென்று ஓடிக்கொண்டிருந்த தண்ணீர் வெள்ளத்தை குடிசை வாசலில் நின்று ரசித்துக் கொண்டிருந்தாள் அந்தத் தங்கை. அதே சமயம் ‘கட கட’ வென்று இடித்தது ஒரு பயங்கர இடி! அதைத் தொடர்ந்து ‘பளிச்’ சென்று மின்னியது ஒரு பெரிய மின்னல்! ஆனால், ஐயோ! அந்த மின்னல், நமது பாப்பாவின் கண்களைப் பறித்துக் கொண்டு போய்விட்டது. பாப்பா அலறினாள்; சப்தத்தைக் கேட்டு ஓடிவந்த பாட்டியும் கதறினாள்.

அன்று முதல் பாட்டிக்கு ஒரே கவலை. கண்ணிழந்த பேத்தியைப் பார்க்கும் போதெல்லாம் கண்ணீர் விட்டாள்.

இந்த சமயத்தில் அந்தப் பாட்டிக்கு ஒரு யோசனை தோன்றியது. ‘பக்கத்து ஊரில் ஒரு காளி கோவில் இருந்தது. வாரத்திற் கொரு முறை அந்தக் கோவில் பூசாரிக்கு சாமி வரும். அப்போது கேட்கும் வரமெல்லாம் தரும்’—ஊரெல்லாம் பரவியிருந்தது இந்த வதந்தி. ‘அந்தச் சாமியிடம் போய் கண்களைக் கேட்டால் என்ன?’—இப்படி எண்ணினாள் அந்தப் பாட்டி.

நினைத்தபடி செய்தும் விட்டாள். அன்றே ஐந்து மைல் தூரத்தில் இருந்த அந்த ஊருக்குப் புறப்பட்டாள். பாவம், அந்தக் குடுகுடு கிழவி நடக்க முடியாமல் நடந்தாள். தள்ளாடித் தடுமாறி காளிகோவிலுக்கும் போய் விட்டாள். கோவிலில் ஒரே கூட்டம். பூசாரி வந்தார். காளியின் சிலைக்கு முன்னால் நின்றார். கொஞ்ச நேரம் மௌனம். மறுகணம் ‘ஓகோ, ஆகா!’ என்று அலறினார். அவருக்கு சாமிவந்து விட்டது! எல்லோரும் ஏதேதோ கேட்டார்கள். பாட்டியின் கட்டமும் வந்தது. தன் பேத்தியின் ‘கண்களை’க் கேட்டாள். “ஆகா! கிழவியே, உன் பேத்தியின் கண்களா வேண்டும்? தருவேன்; தருவேன்! ஆனால், காணிக்கை வேண்டும் காளியாத்தாவுக்கு. இன்னும் ஒரு மாதத்தில் கொழுத்த காளைமாட்டுடன் கோவிலுக்கு வந்தால்தான் கண்கள் வரும்” என்று அலறினார் பூசாரி.

பாட்டி திரும்பி நடந்தாள். காளை மாட்டுக்கு எங்கே போவது?–இதுதான் அவள் சிந்தனை. பாப்பாவின் கண்கள் மீண்டும் தெரிய வேண்டுமே! அதற்கு எப்படியாவது பூசாரி கேட்ட காணிக்கையை சேர்த்து விடத்தான் வேண்டும். இந்த முடிவுசெய்தாள் பாட்டி.

அன்று முதல் அந்தப் பாட்டி கடுமையாக உழைத்தாள். மாட்டைப்போல் உழைத்தாள். குடிசையிலிருந்த சட்டிப்பானைகளை எல்லாம்கூட விற்று விட்டாள். கொஞ்சம் கொஞ்சமாக பணத்தைச் சேர்த்தாள். தெரிந்தவர்களிடம் போய் பல்லைக் காட்டினாள். கடன் வாங்கினாள். கடைசியில் ஒரு மாதம் முடிவதற்குள் மாட்டையும் வாங்கி விட்டாள். பாட்டிக்கு ஒரே மகிழ்ச்சி! பாவம், கண்ணுக்குத் தெரிந்த பெரிய பெரிய மருத்துவர்களால்கூட சுலபமாகத் தர முடியாதது கண் பார்வை; அதை கண்ணுக்குத் தெரியாத கடவுளா தந்துவிடப் போகிறார்? இதை உணராத பாட்டி அப்போதே தன் பேத்திக்கு கண்கள் தெரிந்து விட்டதாக மகிழ்ந்தாள்.

அன்று பூசாரிக்கு சாமி வரும் தினம். பாட்டி, தன் பேத்தியுடன், கொழு கொழு என்றிருந்த காளைமாட்டை இழுத்துக் கொண்டு காளி கோவிலுக்கு வந்து சேர்ந்தாள். பூசாரிக்கு சாமி வந்தது. வழக்கம்போல் அலறினார். அந்த அலறல் ஒலியையும், உடுக்கை சப்தத்தையும் கேட்ட காணிக்கை மாடு பயந்தது. மிரண்டது. ‘உஸ்’ ஸென்று சீறிக்கொண்டு பாய்ந்தது. தடுத்து நிறுத்த முயன்றாள் அந்தக் கிழவி. ஆனால்,

● தொடர்ச்சி 10-ம் பக்கம்

## சிறிய வயதிலே

### காற்றில் பறந்த கவிதை

★

மாலை நேரம்-கடற்கரையோரம்!

சொல்ல முடியாத கூட்டம். கேட்க வேண்டுமா? சிறுவர்களின் விளையாட்டுக் கூச்சல் — பெரியவர்களின் சிரிப்பு சப்தம்-ஒரே அழகு தான்; மகிழ்ச்சிதான்!

ஆனால், அக் கூட்டத்திலிருந்து விலகி, ஒரு மூலையிலே— ஒரு மணல் மேட்டிலே உட்கார்ந்திருந்தான் ஒரு பையன். அவன் முகத்தில் சிரிப்பில்லை; கண்களில் களிப்பில்லை; பார்வையில் மகிழ்ச்சியில்லை; ஒரே சிந்தனை! என்னதான் யோசனையோ!

அவன் கையில் ஒரு பேப்பர் இருந்தது. இன்னொரு கையில் பேனா இருந்தது. அவன் கண்கள் கடலையே பார்த்துக் கொண்டிருந்தன! திடீரென்று என்னவோ நினைத்தான். பேனாவைத் திறந்தான், ‘விறு விறு’ என்று எழுத ஆரம்பித்தான். எழுதிக் கொண்டே யிருந்தான். எழுதியும் முடித்தான். அது என்ன தெரியுமா? ஒரு சின்னப் பாட்டு!

பையன் ஆசையுடன் அந்தப் பாட்டை ஒரு முறை திரும்பப்படித்தான். அவனுக்கு பரம திருப்தி! ஆனால் திடீரென்று, ‘விர்’ ரென்று அடித்தது ஒரு பெரும் காற்று. அதே சமயம் அவன் கையிலிருந்த பேப்பர் நழுவியது. காற்றோடு பறந்தது. பையன் ‘விருட்’ டென்று எழுந்தான். துரத்திக் கொண்டு ஓடினான். ஆனால், என்ன பலன்? பறந்து சென்ற காகிதம் கடலில் விழுந்தது. பாவம், அவன் சற்று நேரம் அங்கே நின்றான். திரும்பிநடந்தான்—வேறு வழி?

அப்படி சின்ன வயதிலே கவிதை எழுதப் பழகி, அதை கடலுக்கு உணவாகத் தந்த அந்தத் தம்பி யார் தெரியுமா? அவன் தான் பிரசித்தி பெற்ற ஆங்கிலக்கவி. வால்ட் விட்மன்!

## பெரிய மனிதர்கள்

# அறிக்கை பாரீர்! ஆவன செய்வீர்!

★

- கல்லக்குடி வழங்கப் பட்டுவிட்டது; அறப்போர் வென்றது; என் வாழ்த்தும் வணக்கமும் தொடர்பு கொண்ட அனைவருக்கும்.
- கல்லக்குடி வழங்கிய மத்திய சர்க்கார் இரயில்வே அமைச்சருக்கும்,மாநிலத்தின் மனப்போக்கை எடுத்துக்காட்டி, இந்த நிதி கிடைக்கச் செய்த சென்னை சர்க்காருக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.
- கல்லக்குடி வழங்கப் பட்டிருப்பது, காமராசர் சர்க்கார், மக்கள் குரலுக்கு மதிப்பளிக்கும் மாண்பு கொண்டதுஎன்பதற்கு மற்றோர் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. மகிழ்கிறேன்,
- கல்லக்குடி கிடைக்கத் தொண்டாற்றிய அனைவருக்கும், துணை நின்ற பல்லோருக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன்.
- கல்லக்குடி கோரி நடத்தப்பட்டகிளர்ச்சியின்போது உயிரிழந்த வீரத் தியாகிகளை எண்ணி உருகாமலிருக்க யாரால் இயலும்? அவர்களின் வீரத் தியாகம் வீண் போகவில்லை என்பது கண்டு, நமது மன மெலாம் எழுச்சி மயமாகிறது.
- கல்லக்குடி காண அரும்பாடுபட்டு உயிர் நீத்த தோழர்களின் குடும்பத்தாருக்கு 'நினைவுக் காணிக்கை' செலுத்த வேண்டியது தி. மு. கழகத்தின் கடமை; ஏன், அறம் அறிந்த அனைவருக்கும் அக்கடமை உண்டு.
- கல்லக்குடி வெற்றி கண்ட தோழர்கள், இனி, அந்த 'காணிக்கை' உருவாகச் செய்யும் பணியினை அடுத்த கட்டமாகக் கொள்ள வேண்டுகிறேன், இது குறித்து தோழர்களின் சீரிய யோசனைகளை அறிய அவாவுள்ளவனாக இருக்கிறேன்.

அன்பன்,
அண்ணாதுரை



க. அருணாசலம் (ராமு)
தோற்றம் ; 31—8—33
திருமணம் : 2—7—52
மறைவு : 28—7—54

## எனது நன்றி

எனது அருமைச் செல்வமான அருணாசலம் என்ற ராமுவை ஜூலை 28-ம் நாள் நான் இழந்துவிட்டபோது, நேரில் வந்தும், தந்தி, கடிதங்கள் மூலமாகவும் என்னுடன் வருந்தி ஆறுதலளித்த நண்பர்களுக்கும்தோழர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,
காஞ்சி - கல்யாணசுந்தரம்

## தஞ்சைக்கு நஷ்டம்

தஞ்சை மாவட்டப் பெரு நிலக்கிழாரும் தேசிய இயக்கத்தில் பல நாள் தொண்டு புரிந்தவரும், தஞ்சைத் தரணியிலே செல்வாக்குமிக்கவரும், தமிழ் பால் அன்பு கொண்டவருமான திரு வி.நாடிமுத்து அவர்கள் இயற்கை எய்திய செய்தி நம்மையெலாம் ஆறாத் துயரத்தில் ஆழ்த்துகிறது. அவரது குடும்பத்தாருக்கும் அவரது மருமானும் நமது நண்பருமான தோழர் என். எஸ். சண்முகவடிவேலு அவர்கட்கும் நமது அனுதாபம் உரியதாகுக.

## குறளோவியம்

'அடுத்த இதழில் 'குறளோவியம்' தவறாது இடம் பெறும்.

## கொள்கை வளருது கோபுரம் போலே!

### காட்டூர் பொதுக் கூட்டம் அறிவாலயம் கட்ட முயற்சி

★

திருவாரூரை அடுத்த காட்டூர் கிராமத்து மக்கள் கட்சி பேதமின்றி 31-10-54 ல் நடத்திய பொதுக் கூட்டத்தில் தோழர் மு. கருணாநிதிக்கு வரவேற்பு இதழ் அளிக்கப்பட்டது. காட்டூர் கிராமப் பொதுமக்கள் பாதுகாப்பு சங்கத்தாரால் அளிக்கப்பட்ட அந்த வரவேற்பில் அந்தக் கிராமத்தில் அமைக்க இருக்கும் பள்ளிக்கூட கட்டிட நிதிக்கு ஒத்துழைப்பு தரவேண்டுமென்று கருணாநிதியை கேட்டுக் கொள்ளப்பட்டது. காட்டூர் நிலக்கிழார் திரு. கே. வி. ராமய்யா அவர்கள் தலைமையேற்று விரிவுரையாற்றினார். தோழர். எஸ். ஜி. லிங்கம் அவர்கள் பேசினார். காங்கிரஸ் கட்சியின் சார்பில் தோழர் முருகையா அவர்களும், திராவிட கழக சார்பில் தோழர் முனுசாமி அவர்ளும், கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தோழர் ஆர். சுந்தரம் அவர்களும் ஆசிரியர் கோவிந்தராசனும் சொற்பொழிவாற்றினர். பின்னர், கருணாநிதியை தலைவராகவும், கே. வி. ராமய்யா அவர்களை செயலாளராகவும் கொண்ட பள்ளிக்கூட கட்டிட அமைப்புக் குழு ஒன்று நிறுவப்பட்டது. தோழர்கள் அன்பில்தர்மலிங்கம், ஜி. பராங்குசம், முல்லைசக்தி,தஞ்சை சண்முகவடிவேல், கருணை ஜமால், தென்னன், டாக்டர் விசயராகவன், குடந்தை ராமலிங்கம் ஆகியோர் அந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## பிறைவானம்...

[9-ம் பக்க தொடர்ச்சி]

மறுகணம்...என்ன கோரம்! பாய்ந்து வந்த அந்தக் காளையின் கூறிய கொம்புகள் பாட்டியின் அடி வயிற்றில் பாய்ந்தது. பாட்டி 'ஐயோ' என்று அலறினாள். கீழே சாய்ந்தாள். வயிற்றிலிருந்து 'குபு குபு' வென்று இரத்தம் பீறிட்டது. அடுத்த கணம் பாட்டி பிணமானாள். அதையெல்லாம் கவனிக்காமல் காணிக்கை மாடு எங்கேயோ ஓடிவிட்டது.

கோவிலில் ஒரே கலாட்டா! குருட்டுத் தங்கைக்கு, பிறகு தான் இந்த விபரங்கள் எல்லாம் தெரிந்தன! உடனே "பாட்டி; பாட்டி" என்று கத்தினாள். இரத்தத்தில் விழுந்து புரண்டாள்...ஆனால், என்ன பலன்?...அன்று முதல் அவள் ஒரு பிச்சைக்காரியானாள்.

★ ★ ★

பார்த்தீர்களா; மூட நம்பிக்கையின் விளைவை! கண் வரும் என்று காத்திருந்தாள்பாட்டி. காணிக்கையும் கொண்டு போனாள். ஆனால் கிடைத்தது கண்ணல்ல; சாவுதான்! இப்படிப்பட்ட மூடநம்பிக்கைகளை நாம் நம்பக்கூடாது; நம்பினாலும் பலன்கிடைக்காது

—சொர்ணம்

முரசொலி

பொங்கல் மலர்.

உங்களூர் விற்பனையாளர் களிடம் இப்போதே பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள்,

பொறுப்பாளர்
பொங்கல் மலர்

## ஏழையர் நாட்டிலே ஏனிந்தபேதம்?

★

இந்திய உபகண்டத்தில் உள்ள 176 லட்சம் விவசாயக் குடும்பங்களின் சராசரி வருடாந்தர வருமானம் ரூ 447.

அனாலும் அந்த விவசாயத் தொழிலாளரின் தனி நபர் விகித வருடாந்தர வருமானம் ரூ 104 தான்!

இந்தியக் குடிமகனின் தேசிய வருமானம் கூட 264 ரூபாய்கள்தான்!

அந்த அரைப் பட்டினிகளும் கால் பட்டினிகளும் நிறைந்த நாட்டிலேதான் ஒருவர் மெய்மறந்து வாழ்கிறர்.

இதோ, 10,00000!-(பத்து லட்சம்)-குறுக்கெழுத்து போட்டியின் தீபாவளி போனஸ் தொகையல்ல!

கிண்டிமாளிகை வாசியாம் கவர்னர் துரையின் ஒரு ஆண்டுச் சம்பளம், அது!

தரித்திர பூமியிலே இருக்கலாமா இந்த ஏற்றத் தாழ்வு?

# பொதுவாழ்வு

## "மிஸ்டர். மெர்டிகா"

மிஸ்டர் மெர்டிகா

"ஏழுகோடி மக்களைக் கொண்ட எங்கள் தாயகத்தை சில லட்சம் பேரைக் கொண்ட ஒரு டச்சுக் கும்பல் அடக்கி ஆளுவதா? வாளுக்கு வாளேடுத்து, ரத்தஆறு ஓடச் செய்தாவது விலங்கை ஒடித்து என் தாய் நாட்டை விடுதலைக் கவி பாட வைப்பேன்" — இப்படி ஒரு ஒற்றைக் குரல் 1926-லேயே தொடங்கி விட்டது அந்த நாட்டில். சிற்றுளியும், சுத்தியலையும் தாங்கி சிற்பவேலைகள் செய்து வாழும் ஏழைச்சிற்பியின் மகன் இவ்வாறு எழுச்சி ஏட்டுக்கு முகவுரை தீட்டுவானென்று யாரும் எதிர்பார்க்கவில்லை. முகவுரை மட்டுமல்ல, ஏட்டையும் எழுதி முடிவுரையும் தீட்டி, அதை அரங்கேற்றும் ஆற்றல் பெற்றவன் அவன்—என்பதை காலம் நிரூபித்து விட்டது.

### மிஸ்டர் மெர்டிகா!

விடுதலை, விடுதலை என்று புலம்பிக் கொண்டிருந்த டாக்டர் சுகர்ணேவுக்கு அந்த நாட்டு மக்கள் இந்தப் பெயரைச் சூட்டி விட்டார்கள். 'மெர்டிகா' என்ற சொல்லுக்கு 'விடுதலை' என்று பொருளாம். 'பரந்த கண்ணேட்டம்' என்று பொதுவுடைமைக் கட்சிக்காரர்கள் கிண்டலுக்காக அழைக்கப் படுகிருர்களே அது போலல்ல அந்த 'மெர்டிகா'. 'பஜகோவிந்தம்' என்று குறிப்பிடப் படுகிருரே ஆச்சாரியார் அது போலுமல்ல. மெர்டிகா! அன்பு ததும்ப, ஆசை வழிந்தோட வாஞ்சையோடு சூட்டப் பெற்ற புனைப் பெயர் அது. மெர்டிகா என்றசொல்லை எண்ணிப் பார்க்கும்போதுகூட இந்தோனேஷிய மக்களை ஒரு வகை இன்ப லாகிரி பிடித்து அணைக்கத்தான் செய்தது.

டாக்டர் சுகர்ணே சாதாரண மனிதர். இந்தோனேஷியாவில் கட்டிட நிர்மாண கர்த்தனுகை தன்னுடைய வாழ்க்கையைத் தொடங்க எண்ணிய அவரை, டச்சுக் காரர்களின் வெறியாட்டமும், அதனுல் பட்டுத் தவித்த சொந்த நாட்டு மக்களின் வேதனைக் குரலும் சுகர்ணேவை குடியரசு நாட்டின் நிர்வாக தலைவனுக்கி விட்டது.

### முகாம் அமைத்தார்!

1926! இந்தக் காலம் டச்சுக் காரர்களின் ஆதிக்கம் வலுப்பெற்றிருந்த காலம் இந்தோனேஷியாவில், பேச்சும், கடைக் கண் வீச்சும் சட்டமாக்கப் பட்டு, இந்தோனேஷிய மக்களை சாருகப் பிழிந்து போதை தரும் சுவைநீராக டச்சுக் காரர்கள் அருந்திக் கொண்டிருந்த 'சகாப்தத்'தில் தனிமனிதர் ஒருவர் விடுதலைக் கிளர்ச்சி தொடங்கி யிருக்கிருரென்றுல் எவ்வளவு துணிவு வேண்டும்? எத்தகைய நெஞ்சுரம் தேவைப்படும்? சுகர்ணே, அப்பேர்ப்பட்ட ... சுதந்திரப் படையை சே...

திடீரென்று டச்சுக்காரர்களின் அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்பட்டது. 4500 இந்தோனேஷியர்கள்விசாரணையின்றி நியூகினியிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். கொடுங்கோலர்களின் இந்தக் கோர தாண்டவம் சுகர்ணேவுக்கு—இந்தோனேஷியாவின் சுயமரியாதைச் சுடருக்கு இதயத்தில் ஈயத்தைக் காய்ச்சி ஊத்தி விட்டது. இனமுழக்கம் தொடங்கிவிட்டது, "பேரன்பு கொண்டவர்களே, பெற்ற தாய்மார்களே, பெரிய தொரு சமுதாயத்தினராகிய நாம் எத்தனை நாட்களுக்குத்தான் இத்தனை துன்பங்களை அனுபவிப்பது? ஒரு லட்சியத்தின் அடிப்படையில், ஒரே கொடியின்கீழ் அணிவகுப்போம் வாருங்கள்! அட்டை குணம் படைத்த அந்நிய டச்சுக்காரர்களை அடித்துத் துரத்துவோம் புறப்படுங்கள்" என்று புது வேகம் பாய்ச்சிப் புரட்சிப் படையை அணிவகுத்தார். அந்த இயக்கத்திற்கு 'பார்டி நேஷனல் இந்தோனேஷியா' என்று பெயரிடப்பட்டது.

புரட்சிப்படையின் முன்னேடும் வீரரானசுகர்ணேவின் மீது டச்சுபீடத்தின் கண்கள் பதிந்துவிட்டன. 1934ம்ஆண்டு சுகர்ணே ப்ளோர்ஸ் தீவிற்கு நாடு கடத்தப்பட்டார். தாய் நாட்டில்—சொந்த வீட்டில் இருக்கக் கூடாதென சுகர்ணேவை துரத்தியடித்த டச்சு ஏகாதிபத்தியம் ப்ளோர்ஸ் தீவிற்கு சென்ற பின்பும் டாக்டர் சுகர்ணேவை விட்டு வைக்கவில்லை—ஆமாம்; போலிக் காரணங்கள்காட்டப்பட்டுசுகர்ணேஅங்கிருந்து பாங்கொலான் என்னுமிடத்திற்கு அனுப்பப் பட்டார். அப்போது சுகர்ணேவுக்கு வயது முப்பத்தி நான்கு.

ஜர்மானியப் படை ஹாலந்தைத் தாக்கி விட்டது. அப்போது பொது எதிரியாக கருதப் பட்ட ஹிட்லரை முறியடிக்கஜாவா மக்களை, தான் திரட்டித் தருவதாக சுகர்ணே டச்சுக் காரருக்கு உறுதி கூறினுர். அவ நம்பிக்கை கொண்ட அந்த டச்சு அரசாங்கம் சுகர்ணேவின் சொல்லுறுதியை நம்பவில்லை. அது போலவே ஜப்-



பானியர்கள் ஜாவாவைதாக்கிய நேரத்திலும் சுகர்ணே விடுதலை செய்யப் படவில்லை. பெற்று வளர்த்து, பேணிக் காப்பாற்றிய பொன்னுட்டில் பிற ஜெமைக் காரர்கள் நடத்திய ராணுவ தர்பாரை கடல் சூழ்ந்த காராக்கிரகத்தீவுகளிலிருந்து சுகர்ணேவால் கேள்விப் பட்டு, கேள்விப்பட்டு கண்ணீர் வடிக்கத்தான் முடிந்ததே தவிர களத்திலே குதிக்க முடியவில்லை. இன்னும் சொன்னுல், டச்சுக் காரர்கள் இந்தோனேஷியாவை விட்டு வெளியேறும் போதுகூட சுகர்ணே அடைக்கப் பட்டிருந்த சிறைக் கூடத்தின் பூட்டுச் சாவியை ஜப்பானியர்களிடம் கொடுத்துவிட்டுப் போகவில்லை—தாங்களே தான் எடுத்துப் போய் விட்டார்கள். ஜப்பானியர்களின் குண்டு வீச்சு, சிறைக் கூடத்தோடு சுகர்ணேவை ஜீரணித்து விடட்டும் என்ற எண்ணம் போலும் அந்தடச்சு (!)சேரோளர் களுக்கு!

### வீரப்பா, விவேகமா?

இந்தோனேஷியா, டச்சுக் காரர்களின் கையிலிருந்து ஜப்பானியர் கைக்கு மாறியது. இதனுல், எஜமான்மாற்றமே தவிர எந்தவித ஏற்றமும் இந்தோனேஷியா மக்களின் வாழ்வில் காணப்படாது என்பதை உணர்ந்த சுகர்ணே, ஜப்பானியர்களை நயந்து இருந்தே இந்தோனேஷியாவின் வாழ்வை வளமாக்கிவிட எண்ணிஞர். அடுத்துக் கெடுப்பது அவர்கீர்த்தி என்பதை அவர் அறிவார்—என்றுலும் அந்த நேரத்தில் ஜப்பானியரை எதிர்த்துப் போரிட போதிய வசதி தன்னுடைய இயக்கத்திற்கு இல்லை யென்பதை நன்கு தெரிந்து கொண்டிருந்தார் சுகர்ணே, அப்போது விவேகத்தைப் புறக்கணித்து வீரப்புக்கு முதலிடம் கொடுத்திருந்தால்! சுகர்ணேவின் இன்ப நினைவுகளெல்லாம் 'கனவிலே சிமாஞன கதை' யாக முடிந்திருக்கும்.

1943! நேச நாட்டுப் படைகள் மலாய் நோக்கி நடை போட்டது. ஜப்பானியர்கள் சுகர்ணேவுக்கு சூடுஏற்றினுர்கள் சுகர்ணே ... சைந் துகூட ... க்க

... பாய்கிறது' என்ற பழிச்சொல் தம்மை நாடிவந்தாலும் இருகை யேந்தி வரவேற்கத்தயாராஞர். மாலைக்கதிரோனின் ஒளியைப் போல ஜப்பானியரின் செல்வாக்கு குன்றிக்கொண்டுபோனதால் சுகர்ணேவை அசைத்துக் கூட பார்க்க முடியவில்லை டோக்கியோ துரைகளால். டச்சுக்காரர்களை எதிர்க்க ஜப்பானியர்களால், இந்தோனேஷியர்களுக்கு கொடுக்கப்பட்ட ஆயுதங்கள் இறுதியில் ஜப்பானியர்களுக்கே உலைவைக்க உதவிற்று. ஜப்பானியர்கள் சரணடைவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பே இந்தோனேஷியாவிலிருந்த யுத்த கால அரசாங்கம் கலைக்கப்பட்டது. 1945-ஆகஸ்டு 17ம் தேதி சுதந்திரக் குடியரசாக இந்தோனேஷியா பிரகடனப் படுத்தப் பட்டது. தலை நகராம் ஜோக் ஜகர்த்தாவில் இருவர்ணக்கொடி பறக்கவிடப்பட்டது. டாக்டர் சுகர்ணேஇந்தோனேஷியக் குடியரசின் தலைவராக்கப்பட்டார். பதினேழு மந்திரிகள் அடங்கிய மந்திரி சபை ஒன்று நிறுவப் பட்டது.

### விபீடணர்களின் ஆசை!

எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் அங்கெல்லாம் 'விபீடணர்கள்' வாழத்தான் செய்திருக்கிருர்கள். இதோ, இந்தோனேஷிய விபீடணர்களின் ஆசைக்கனலைப் பாருங்கள்: "இந்தப் பயல் சுகர்ணே இருக்கிருனே அவர் ஒரு படுபோக்கிரி. நிச்சயமாக அவர் பச்சை பொதுவுடைமை வாதியாகப் போகிருன். குவிஸ்லிங்கை கொன்றதைப் போல இவனையும் சுட்டுக் கொன்றுவிட வேண்டும்"

சோபிதவாழ்வு நடத்திக் கொண்டிருந்த இந்தோனேஷிய பிரபுக்கள் இப்படித்தான் பேசிக் கொள்வார்களாம் சுகர்ணேவைப் பற்றி. எவ்வளவு பரந்த நோக்கு பாருங்கள்!

### யார்?

கம்பீரமான தோற்றமு...
சுகர்ணே பாலி நாட்டு...
பெண்ணுக்கும் ஜாவாவ...
பெற்ற முஸ்லீம் குடும்...
சேர்ந்த ஆசிரியர் ஒரு...
உதித்தவர். தனித்த...
வில் கனிவோடு...
ஆனுல் பிரசங்க...
அக்கினி மழைய...
வார்—அந்த...
இந்த முரண்...
எண்ணிவிந்...
மொத்தத்...
கள் ...
அவருக்...
ஐம்ப...
புக...

# கடைசிப்பக்கம்

பாலன்;—சேத்துப்பட்டு

(?) கம்பன், தான் இயற்றிய ராமாயண நூலின் துவக்கத்திலுள்ள காப்புச் செய்யுளில், பல தெய்வங்கள் உண்டென்று நம்புவோருக்கு எதிராக ஒரே தெய்வக் கொள்கையை வற்புறுத்தி இருப்பதாகவும், அதையும் '**தலைவர்**' என்ற பொதுப் பெயராலேயே குறிப்பிடுவதாகவும்; ஆகவேதான் ஒன்றே குலமும் ஒருவனே தேவன் என்ற கொள்கை உடைய தமிழரசுக் கழகத்தாரும் கம்பனைப் போற்றுவதாகவும் ஒரு பத்திரிகை கூறுகிறதே— அது பற்றி தங்கள் கருத்தென்ன?

*இவையெல்லாம், "ஆச்சாரியார் எவ்வழி அவ்வழி அவர் தம் அடிமைகளும்"-என்கிறபடி அமைந்த சூதுத்திட்டம் தான் தோழரே!*

*கம்ப ராமாயணத்தில் முதற் செய்யுளை மட்டும் எடுத்துக் காட்டிய அந்த 'சுத்தத் தமிழர்' இரண்டாவது செய்யுளில் கம்பன் "சிற்குணத்தர்" என்றும் மூன்றாவது செய்யுளில் "ஆதியந்தம் அரியென" என்றும் திருமாலுக்கு முதன்மை சொல்வதை ஏன் மறைக்கிறார்? மறைமலையடிகளாரும் ஒப்புக் கொண்டதை இவர் மட்டும் ஏன் மழுப்புகிறார்?*

*அது மட்டுமா?*

"முளரிமேல் வைகுவான்
முருகற் றந்த அத்
துளிரியல் பாகத்தான்
தடக்கை ஆழியான்
...ளவி ஒன் ருவரே யன்றி
ஐயமில்
...பர் தனித்தனி
கிடைப்பரோ துணை"

என்ற செய்யுளில் மும்மூர்த்திகளும் ஒன்று சேர்ந்தால்தான் இராமனுக்கு ஒப்பாவரேயன்றி, அவர் தனித்தனியே ராமனுக்கு ஒப்பாகமாட்டார் என்று தம் கருத்தைத் தெரிவித்து, ஏன் கம்பன் மும்மூர்த்தித் தத்துவத்தை ஒப்புக்கொண்டு, அந்தக் கடவுள் வரிசையிலும் மேலான ஒருவனாக இராமனையும் சேர்க்க வேண்டும்?

*கேட்பவர் கேளாக் காதினர் என்ற நினைப்பில் ஏதேதோ உளறுகிறார், 'மரத்தமிழர்'; பாவம்!*

பி. எஸ். ஏ. ரகீம். கட்டிமேடு.

(?) நேரு–கோத்தலவாலை ஒப்பந்தம் இலங்கை வாழ்தமிழர்களுக்கு சாதகமளிக்குமா? அல்லது பாதகமளிக்குமா?

*இலங்கையும் – திராவிடமும் செய்து கொள்கிற - ஒப்பந்தம் ஒன்றுதான் இலங்கைவாழ் தமிழர்களுக்கு பூரண சாதகம் அளிக்கக் கூடியதாயிருக்கும்.*

என். எஸ். பந்தம்—சென்னை-1

(?) 'திராவிடம் பிரிவது முட்டாள் தனம்' எனக் கூறுபவர்களை என்னவென்று அழைப்பது?

*அவசரத்திற்கு இப்போது அகராதியில் வார்த்தையில்லை. அவர்கள் சொன்னதில் உள்ள "முட்டாள் தனத்தில்"- தனத்தை, சென்சார் செய்துவிட வேண்டியதுதான்!*

(?) மனிதன் அரூபியாக மாற முடியுமா?

*முயன்றால் முடியாதது எதுவுமில்லை. மூலிகைகளால் அதைச் செய்ய முடியும் என முன்னோர்கள் கண்டிருக்கிறார்கள். விஞ்ஞானம் செல்லும் வேகத்தைப் பார்த்தால் அரூபியாக முடியுமென்றே தோன்றுகிறது. எதிரேயிருப்பவர் கண்ணுக்குத் தன்னைத் தெரியாமல் ஆக்கிக் கொள்கிற பச்சிலைப் புகைகள் இப்போதும் பல தந்திர நிபுணர்களிடம் இருப்பதாக அறிகிறோம், லண்டனில் பேசும் மனிதனை நியூயார்க்கில் பார்க்கலாமென்ற 'டெலிவிஷன்' வரப்போகிறது: • என்று நம்முடைய அப்பா காலத்தில் யாராவது நினைத்தோமா?*

ர. சுந்தரம், பி. எஸ். ஸி

(?) சென்னை வானொலி நிலையத்திலிருந்து ஒலி பரப்பப்படும் சிறுவர் நிகழ்ச்சிகளில் 'தமிழ்' என்ற பெயரில் அக்கிரகாரத்து உரையாடல்கள் வெளியாகிறதே; இதைக் கவனிப்பார் இல்லையா?

*கவனிக்கிறோம் நாம்; கண்டிக்கவும் செய்கிறோம்.*

*கவனிக்கிறது அக்கிரகாரம்; களிக்கிறது! விபூஷணர் குறைய வேண்டும் - விடுதலைகீதம் அனைவரும் பாடவேண்டும். அப்போது இவைகளையெல்லாம் சரியானபடி கவனிக்கலாம்,*

பதி—சென்னை

(?) கடிதம் எழுதும்போது முதலில் "தபால்காரர் துணை" யென்று எழுதினால் என்ன?

*அய்யோ அது பாபமாச்சே! மனித உழைப்பை மனிதன் மதிக்கும் மகாபெரிய தவறை மனிதர்கள் செய்யலாமா?*

மா. பாலசுப்ரமணியம், பாலமேடு

(?) கீழ்கண்ட நூல்களில் தமிழனுக்கு வேண்டியவை எவை? திருக்குறள் - சிலப்பதிகாரம் - பாரதிதாசன்கவிதை - பாரதியின் கவி - வேதகால நூல் - இராமயாணம்.

*வேண்டாதவைகளைச் சொல்லுகிறேன், இராமாயணம், வேதகால நூல் - பாரதிகவிகளில் சில!*

எஸ். பெருமாள் நம்பி-அரக்கோணம்.

(?) குடந்தையில் திராவிட கழகத் தோழர்கள் கேட்ட கேள்விகளுக்கு கருணாநிதி பதில் சொன்னதாக வெளி வந்ததே; என்ன கேள்விகள்? என்ன பதில்கள்?

*கேள்விகள் எல்லாமே; குத்தூசியார் அவர்கள் தயாரித்த பழைய கேள்விகள்தான். முடிந்தால் அடுத்த இதழில் பிரசுரிக்க முயற்சிக்கிறேன்.*

இளமைப் பித்தன்—பம்பாய்-22.

(?) கடிதம் எழுதும்போது சிலர், 'கடவுள் துணை' என்று முதலில் எழுதுகிறார்களே; ஏன்?

*பேனா சரியாக எழுதுகிறதா என்று பார்ப்பதற்காக!*

வ. கு. செல்வராஜ் — ஜோலார்பேட்டை

(?) காதல் எவ்வாறு பிறக்கிறது? அதன் முடிவு என்ன?

*"கா"—"த"—"ல்"—என்ற மூன்று எழுத்துக்களின் சேர்க்கையிலே பிறக்கிறது காதல். அதன் முடிவு—முதல் எழுத்து "சா" என்று மாறுவதிலே அமைந்திருக்கிறது.*

## முக்கிய அறிவிப்பு

முரசொலியில் வெளியாகும் கட்டுரைகள், கவிதைகள், ஆகியவைகளை சில இழி குணாளர்கள் தொகுத்து வெளியிடும் முயற்சியில் மீண்டும் இறங்கியிருப்பதாகத் தெரிகிறது. அவ்வண்ணம் யாராவது ஈடுபடுவார்களேயானால் இம்முறை தக்க பாடம் (சட்டப்படி) கற்பிக்கப் படும் என்பதை எச்சரிக்கையாகக் கொள்ள வேண்டுகிறோம்.

ஆசிரியர்.
முரசொலி


## கருணாநிதியின்

பத்து கதைகள்

## பழக் கூடை

1. பழக் கூடை
2. மானம்
3. தொடர்கதை
4. அனார்கலி
5. விஷம் இனிது
6. பாலைவன ரோஜா
7. புகழேந்தி
8. திடுக்கிடும் கதை
9. வேணியின் காதலன்
10. நளாயினி

முறை காறு பதிப்பகம்
சென்னை-14.


பி. மலையான்—சென்னை.

(?) கல்லக்குடி பெயர் மாற்றியதற்கு மகிழ்கிறீர்களே; டால்மியா, இனிமேல் "கல்லக்குடி சிமெண்ட்" என்று போட்டு விற்பாரே; அதற்கும் மகிழ்வீர்களா?

*ஆரியர்கள் அதிகம் வசிக்கிறார்கள் என்பதற்காக, தியாகராய நகர் என்ற பெயரை விரும்பாத திராவிடன் இருக்க முடியுமா?*


...ருணாநிதி
...நிகழ்ச்சிகள்

...வேலூர்
...ண்ணாமலை
...நகர்


### சீனத்து விருந்தாளி......

[1-ம் பக்க தொடர்ச்சி]

உலகமக்களின் விடுதலையைதுரிதப்படுத்தும் விரிந்த உளத்தினரே! நும் காலடியில் துவளும் திராவிடத்து விடுதலையை மட்டும்ஏன் தள்ளிப் போடுகிறீர்!" என்றும் அவரைத் தட்டிக் கேட்கிறது.

இதற்கு பண்டிதர் அளிக்கும் விரைவான பதில்தான் அவரது வருங்காலத்தை வகுக்க வேண்டும் என்பதை நம்மால் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.


...ம. 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்படுகிறது.
...சன்னத் தெரு, ராயப்பேட்டை, சென்னை—14